# பொன்னி

மலர் 8 | 1-3-1955 | இதழ் 12




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAR 1955
MADRAS
1527
1-55

க[illegible]டு கண்ணிணை
[illegible]க்கின் வாய்ச்சொற்க
[illegible]மில.

—குறள்.

விலை 4 அணா

197826

1527
1-55
18 MAR

# பொன்னி

## பொருளடக்கம்

மலர் 8 மார்ச் 1, 1955. இதழ் 12

திருவள்ளுவர் ஆண்டு 1986, மாசித் திங்கள், 17-ம் நாள்.


| | | |
|---|---|---|
| தலையங்கம் .... | | .... 3 |
| செய்தித் திரட்டு .... | | .... 4 |
| என்ன முழுகிவிடும் | வாணிதாசன் | .... 6 |
| இயற்கையின் காதல் | வை. அபடிஞ்சி | ... 7 |
| பம்பாய் | டி. கே. சீனிவாசன் | .... 9 |
| உலக அரங்கில் | 'ஜீவகன்' | .... 14 |
| இலங்கைத் திருமுகம் | துரைசாமி | .... 16 |
| கள்வனா? காதலனா? | ம. ரா. பூபதி | .... 17 |
| நம் கருத்து | 'கேயம்' | ... 26 |
| வளரும் படங்கள் ... | | ... 28 |
| ஏன் எடுக்கிறார்கள் ... | | .... 31 |
| ஒளிமாடம் | ந. இராமலிங்கம் | ... 33 |
| அந்த நாள் | "சிலம்பின் செல்வன்" | .... 41 |
| பனிமலர் | வீர. பழனியப்பன் | ... 45 |
| கரிகாலன் கோபம் | "தமிழ்த் தும்பி" | .... 58 |
| பிள்ளையாரும் முத்துவும் | கலைமணி | .... 60 |
| கடலோடி | "உலகப்பன்": | ... 62 |


"பொன்னி"யில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் நிகழ்ச்சிகள் யாவும் கற்பனையே. கட்டுரையாளர்களின் கருத்துக்கு — ஆசிரியர் பொறுப்பல்ல —

விலை 4 அணா

# அலுவலக அறிவிப்பு

அடுத்து வரும் 1—4—55 இதழ் பொன்னி யின் ஒன்பதாம் ஆண்டுத் தொடக்க இதழாகும் 'பொன்னி' பற்றிய நிலையான அறிவிப்பை 'பொன்னி' இதழ் அன்பர்கள் அடுத்த இதழில் எதிர்பார்க்கலாம்.

'பொன்னி' புன்முறுவலுடன் சுவைப்போர் கையிற் சிக்கியபின் அவர்களது இன்பமும், ஆர்வமும் எத்தகையது என்பதை அவர்களின் கடிதக் குவை அறிவித்து வருகிறது.

'பொன்னி' பெறுது உளங் கன்னிப்போன தோழர்களின் துன்பமும் சீற்றமும் எம்மைத் தாக்கினும் அதையும் சரிசெய்ய அடுத்த ஆண்டை உங்கள் வாழ்த்தோடு வரவேற்கின்றோம்.

வணக்கம்.

—ஆசிரியர்.

பொன்னி

# வடக்கும் தெற்கும்!

பேசுவது ஒரே இந்தியா ; அனைத்திந்தியா—செயலில் பிரிவினை மனப்பான்மையை வளர்த்தல் ; இன வேறுபாட்டைப் பெருக்குதல். பேசுவது பொதுவுடமை—செயலில் மாறாக நடத்தல். பேசுவது வேற்றுமை கூடாதென்று—நடைமுறையில் தென்னவர், வடவர் என்ற சிக்கலை உண்டாக்குதல். பேசுவது மொழிவெறி கூடா தென்று—செயலில் மொழிவெறி பிடித்தோராய் நடந்துகொள்ளல். பேசுவது நவ இந்தியாவை நன்முறையில் உருவாக்க நாம் எல்லோரும் ஒத்துழைப்பு நல்கவேண்டுமென்று—செயலில் வடக்கை மட்டும் வளப்படுத்துவது. ஒலிபரப்புவதெல்லாம் "உலகம் இந்தியாவை மதிக்கிறது ; நேருவைப் போற்றுகிறது : ஐந்தாண்டிலே இந்தியா வளம் பெற்று விளங்கும்" என்று. நடைமுறையில் நல்ல நல்ல திட்டங்கள், தொழிற்கூடங்கள் யாவும் விந்திய மலைக்கு வடக்கே அமைத்தல். இவையெல்லாம் வடவர் சொல்வேறு செயல்வேறு கொண்டோர் என்பதைத் தெளிவாக்குகிறதல்லவா?

அண்மையில் நமது சென்னை மாநிலக் கவர்னர் ஒரு பேச்சில் ஒரு நூற்றுக்கு நூறு உண்மையை எடுத்துக் கூறியுள்ளார்—வட நாட்டுப் பல்கலைக் கழகங்களிலே தென்னாட்டு வரலாறு புறக்கணிக் கப்படுகிறதென்று. அதனால் வடநாட்டானாகிய என்னைத் தென் னாட்டு மக்களாகிய நீங்கள் புறக்கணிக்காதீர்கள் என்று அதே பேச்சில் வெளியிட்டுள்ளார்.

அண்மையில் ஆவடி மாநாட்டில் தமிழில் பேசத் தொடங்கிய தும் வடவர்களில் சிலர் கலவரம் விளைவித்ததோடு கட்டுப்பாட் டோடு வெளியேறினரே—இது எதைக் குறிக்கிறது?

தமிழ் மொழி அப்படி என்ன—சால்பற்ற மொழியா? வளமற்ற வறண்ட இந்தி போன்றதா? தனித்தியங்கும் தன்மையற்றுச் செத் துக் கிடக்கும் சீர்கெட்ட 'சமஸ்கிருதம்' போன்றதா? எண்ணில் சிறந்த, எழுத்தில் சிறந்த, பண்ணில் சிறந்த, பாரில் உயர்ந்த, உலக முதன் மொழியாகிய நம் தமிழ் மொழிக்கு இந்த அவல நிலை ஏற் பட்டதென்றால்—இது எதைக் குறிக்கிறது? வடவர் கூறும் ஒரே இந்தியா—ஐக்கிய இந்தியா என்பதெல்லாம் வெறும் பசப்பு மொழிகள் என்பதைத் தவிர வேறு என்ன எண்ண முடியும்?

இவை யாவையும் தென்னாட்டுத் தேசியவாதிகள் கூர்ந்து கவ னிக்க வேண்டும். அப்பொழுதுதான் திராவிட இயக்கத்தினர் கூறும் திராவிட நாட்டின் இன்றியமையாமை நன்கு புலனாகும்.

# செய்தித் திரட்டு

### அண்ணாமலைப் பல்கலைக் கழக வெள்ளி விழா

பிப்ரவரி 7, 8 தேதிகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெள்ளிவிழா சிதம்பரம் அண்ணாமலை நகரில் கொண்டாடப் பெற்றது. அவ்வமயம் பல துறைகளிலும் பண்பட்ட அறிஞர்கள் அங்கு ஒன்று கூடி அவ்விழாவைச் சிறப்பித்தனர். பல்கலைக் கழகம் தமிழ் மொழிக்கு ஆற்றி வரும் தளராப் பணியையும், அதன் அமைப்பாளரான வள்ளல் அண்ணாமலையாரின் கொடைச் சிறப்பைப்பற்றியும், வழிவழி வரும் அவர்கள் குடும்பத்தாரின் தொண்டைப் பற்றியும் பலரும்பாராட்டிப் பேசினர்.

### சென்னை நகரசபை கடனவாங்கும்

அபிவிருத்தி வேலைக்காக பகிரங்க மார்க்கெட்டில் 4 சத விகிதம் வட்டிக்கு 38 லட்சம் கடன் எழுப்ப அனுமதியளிக்குமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளப் பட்டது. இக்கடன் 10 ஆண்டுகளில் திருப்பித் தரப்படும்.

### ரயில் பிரயாணப் புதுக் கட்டணம்

புதிய ஆண்டு இரயில்வே வரவு செலவு திட்டத்தின்படி மூன்றாவது வகுப்பு சாதாரண வண்டிக் கட்டணம் மைலுக்கு 5 தம்பிடியாயிருப்பதை 150 மைல் வரை 5½ தம்பிடியாகவும், 150 மைலுக்குமேல் 300 மைல்வரை 5 தம்பிடியாகவும், 300 மைலுக்கு மேல் 4 தம்பிடியாகவும் புதிய பட்ஜெட்டில் மாற்றப் பட்டிருக்கிறது.

### விவசாய கடன் மசோதா

விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்கும் மசோதாவில் நான்காவது முக்கிய விதி சென்னை அசெம்பிளிக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

### அமெரிக்காவின அணு ஆயுத வெடித் தேர்வு

உலக சமாதானத்தைப் பற்றிப் பேசும் அமெரிக்கா தனது இன்னொரு அணு ஆயுத வெடியை அருகாமையிலுள்ள பாலைவன நிலத்தில் பயிரிட்டுப் பார்த்தன. அதனால் அது வெடித்த இடத்திலிருந்து 275 மைலுக்கப்பால் அதன் ஒளி தெரிந்தும், சில கட்டிடங்கள் அதிர்ச்சியுறவும் செய்தன.

### புதுவையில் தேர்தல்

ஜூன் 4-ந் தேதியன்று புதுச்சேரியில் வயது வந்தோரின் வாக்குரிமைப்படி சட்டசபை, நகரசபை முதலியவைகளுக்கு ஒரே சமயத்தில் தேர்தல் நடைபெறவிருக்கின்றன.

### சேலத்தில் தொழிற்சாலை ஏற்படுத்த....

இரும்பு, அலுமினியம் ஆகிய தாதுப் பொருள்களை ஆராய நிபுணர்களை அனுப்பி இரும்பு, அலுமினியத் தொழில்களை தெற்கே சேலம் போன்ற இடங்களில் தொடங்குவதற்குரிய திட்டத்தை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமாய் மத்திய அரசாங்கத்தை சென்னை அரசாங்கம் கேட்டுள்ளது.

**நேருவின் சோஷலிஸம் பற்றி?**

"இந்தியாவில் சோஷலிஸ சமுதாயத்தை காங்கிரஸ் அரசாங்கம் உருவாக்கப்போவதாக சொல்வதெல்லாம் வெறும் ஏமாற்று வேலையே தவிர வேறெதுவுமில்லை" என்று டெல்லி சட்டசபை எதிர் கட்சி உதவித் தலைவர் ஹிரேன் முகர்ஜி கூறினர்.

**பாகிஸ்தானில் நில நடுக்கம்.**

பாகிஸ்தானில் பலுசிஸ்தான் ராஜ்யத் தலைநகரான குவெட்டாவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதனுல் 14 பேர் கொல்லப்பட்டனர். பல வீடுகள் நாசமாயின.

**இந்தியாவில் எழுதப்படிக்கத் தெரிந்தோர்.**

இந்தியத் துணைக் கண்டத்தில் 36 கோடி மக்களில் ஏதாவது ஒரு மொழியில் சாதாரண கடிதத்தை எழுதவும் படிக்கவும் தெரிந்தோர்கள் 6 கோடி பேர் தான்.

**புதிய எண்ணெய் வயல்கள்**

அஸ்ஸாம் மாகாணத்தில் சில புதிய எண்ணெய் வயல்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவை மூலம் நமது தேவையில் சுமார் நாலில் ஒரு பங்கு கிடைக்கலாமென நம்பப்படுவதாக மத்திய உற்பத்தி அமைச்சர் திரு. கே. சி. ரெட்டி தெரிவித்தார்.

**இலவசக் கல்வி**

மாத வருமானம் ரூ. 100க்குக் குறைவாக உள்ளவர்களின் குழந்தைகளுக்கு எட்டாவது வகுப்புவரை கட்டணம் வசூலிக்கப் படமாட்டாதென்று மந்திரி சுப்பிரமணியம் தனது பட்ஜட் பிரசங்கத்தின் போது வெளியிட்டார்.

**மாலன்கோவின் புதிய பதவி**

ரஷிய பிரதமர் பதவியிலிருந்து ராஜினமா செய்த மாலன்கோவுக்குப் புதிய பதவி கொடுக்கப்பட்டது. அவர் வகித்த பிரதமர் பதவியை புல்கானின் என்பவர் நிர்வகித்து வருகிருர்.

**கண்டன நாள்**


இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டிக்க '20-3-55ம் நாள் ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள்' நடத்துமாறு தி. மு. கழகம் தனது கிளைக் கழகங்களுக்குச் சுற்றறிக்கை விடுத்துள்ளது.

**தமிழ் படிக்க ரஷியர்களின் ஆவல்**

சென்னை வந்திருந்த ரஷிய கலைவாணர் தூதுகோஷ்டித் தலைவர் அண்மையில் நடந்த எழுத்தாளர் மாநாட்டைப் பார்வையிட வந்தபோது, "எங்கள் மொழியில் உங்கள் கவிதைகளை, இலக்கியங்களை மொழி பெயர்க்கிருேம். உங்கள் ஆராய்ச்சிகளை அறிய விரும்புகிருேம், எங்கள் தலைநகரிலேயே தமிழ்ப் பாட்டுகளைக் கேட்க விரும்புகிருேம்" என்று மொழிந்தார்.

**தப்புக் கணக்கு**

ஒரு அதிகாரி கோதுமை விலையை நிர்ணயிப்பதில் தவறு செய்ததால் 1951-ல் சென்னை சென்னை நகரில் மட்டும் அரசாங்கத்துக்கு 74,537 ரூபாய் நஷ்டமேற்பட்டது.



# என்ன முழுகிவிடும்

— கவிஞர் வாணிதாசன் —

வட்ட நிலவு கண்டால்—அதிலுன்
வாள்முகம் தோன்றாதோ?
எட்டி எனைப்பிரிந்தே—சென்றால்
என்ன முழுகிவிடும்?

மங்கையுன் வாள்விழியை—வீரன்
வாள்நுனி காட்டாதோ?
இங்கெனை நீவிடுத்தே—சென்றால்
என்ன முழுகிவிடும்?

மொட்டு வரிசையெல்லாம்—உனது
முத்துப்பல் தோன்றுதடி!
விட்டுப் பிரிந்து சென்றால்—தமிழ்வெறி
விட்டுப் பிரிந்திடுமோ?

மின்னல் நவழ்ந்து வந்தால்—அதிலுன்
மெல்லிடை காணேனோ?
என்னைப் பிரிந்து சென்றால்—உலகில்
என்ன முழுகிவிடும்?

நெஞ்சுருக்கும் குயிலில்—உனது
செஞ்சொல்லைக் கேளேனோ?
வஞ்சித்தெனைப் பிரிந்தால்—கடல்,
வற்றித்தான் போய்விடுமோ?

சங்க இலக்கியமும்—தமிழ் வீரம்
சாற்றும் புறப்பொருளும்—
இங்கே இருக்குதடி!—நீ போனால்
என்ன முழுகிவிடும்?

# இயற்கையின் காதல்

— திரு. வை. அபரஞ்சி —



தென்றல் மெல்ல வந்து—பச்சைத்
தென்னை மரத்தைத் தழுவும்!
தென்ற லோடு கூடித்—தென்னை
சிரித்துக் காதல் பேசும்!

ஆடும் தென்னங் கீற்றில்—செவ்வாய்
அழகுக் கிளிகள் இரண்டு
கூடிக் களிப்பில் மூழ்கும்!—பின்னர்க்
கொஞ்சு மொழியில் பேசும்!

வானத் தெருவில் உலவும்—இன்ப
வட்ட நிலவைக் கண்டு
தேனுர் முல்லை சிரிக்கும்!—நிலவு
சிந்தும் அதன்மேல் ஒளியை!

கரிய கடலின் அலைகள்—பொங்கிக்
கரைக்கு முத்தங் கொடுக்கும்!
அரிய காதல் கலைகள்—அங்கே
அலைகள் புரிதல் காணீர்!

காலைக் கதிரைக் கண்டு—மலரும்
கயத்தில் செந்தா மரைப் பூ!
கோல வண்ணக் கதிரோன்—மலர்க்குக்
கோடி முத்தம் தருவான்!

பாக்கு மரத்தில் படரும்—சொக்குப்
பச்சை வண்ணக் கொடிகள்!
நீக்க மற்று வாழும்—நினைவால்
நேர்மைக் காதல் கொள்ளும்!

## படித்தீர்களா?

வே. இளவளவனின் எழுத்தோவியங்கள்

# இன்பவிளக்கு

புதுமைக் கருத்துக்களினல் பொலிவுற்று
படித்தவர்களாலும், பத்திரிகைகளாலும்
பாராட்டுதல்கள் பெற்றுத் திகழும்
— நற்றமிழ் நாடக ஓவியம். —

விலை ரூ. 2—0—0

# இன்பத்தின் விளிம்பிலே...

படிக்கப் படிக்கத் தெவிட்டாத் தேனூறும்
— பைந்தமிழ்க் காவியம். —

விலை ரூ. 1—12—0

வெளியீட்டோர்:
**கலைவளர் மன்றம்**
காரைக்குடி.

விற்பனை உரிமை:
**மலர் நிலையம்**
133, பிராட்வே, சென்னை-1.

---

உங்களது பொற்கரங்களிலே!

சிலம்பின்செல்வன எழுதிய

## தென்னட்டுச் சிங்கம்

பூரித்து விளையாடுகின்றனா?

இன்றேல்

ரூ. 1—8—0 மணியார்டர் செய்யுங்கள்


விலை ரூ. 1—4—0

●

**இளங்கோ பதிப்பகம்**

கோவை சக்தி காரியாலயம்

கோயம்புத்தூர்.



# பம்பாய்

டி.கே.சீனிவாசன்


தொண்ணூற்று இரண்டரை சதுரமைல் பரப்பு—இருபத்தெட்டு லட்சத்து முப்பதினுயிரத்து நூற்று ஐம்பது மக்கள்—நாற்பத்து மூன்று மருத்துவ விடுதிகள் —நானூற்று எண்பத்து ஒன்பது ஆரம்பப் பள்ளிகள்—இருநூற்று ஐம்பது உயர்நிலைப்பள்ளிகள் —இருபத்திநான்கு கல்லூரிகள்—ஐநூற்று அறுபத்திரண்டு 'பஸ்'கள்—இருநூற்றுத் தொண்ணூற்றெட்டு 'ட்ராம்'கள்—நாற்பத்து ஐயாயிரம் 'மோட்டார் கார்கள்'—ஐம்பத்துஒன்பதினுயிரத்து எழுநூற்றிருபத்தைந்து கடைகள்—ஐம்பத்தாறு அங்காடிகள் (Markets)- ஆயிரம் ஆலயங்கள் —பார்சீ கனவான்கள் —மராட்டியப் பெருங்குடி மக்கள் —மார்வாரி வட்டிக் கடைக்காரர்கள் — குஜராத்தி வியாபாரிகள்—சிந்தி அகதிகள் — தரித்திரம் பிடித்தத் தமிழ் நாட்டு அனுதைகள் !

இது பம்பாய் நகரம் — மாகாணமல்ல !

பம்பாய் கார்ப்பரேஷனுக்கு ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கும் வருமானம் ஏறத்தாழ பத்து கோடி ரூபாய்கள். நூற்று இருபத்தி நான்கு அங்கத்தினர்களைக் கொண்டது இது.

பம்பாய் நகரத்தில் அறுபத்தி ஐந்து ஆலைகள் இருக்கின்றன. அவற்றில் இரண்டு இலட்சத்து இருபதினுயிரம் தொழிலாளிகள் வேலை செய்கின்றனர். ஆண்டு ஒன்றுக்கு நாற்பது இலட்சம் கஜங்கள் துணி உற்பத்தி செய்யப்படுகிறது.

பம்பாய் மாகாணம் முழுதும் உள்ள ஆலைகள் தொழிற்சாலை



பம்பாய் கார்ப்பரேஷன் கட்டிடம்.

கள், இவற்றின் எண்ணிக்கை எண்ணாயிரத்து நானூற்று நாற்பத்தி ஒன்பது—பல்கலைக் கழகங்கள் ஆறு-மருத்துவக் கல்லூரிகள் ஆறு—மருத்துவ மனைகள் ஆயிரத்து நானூற்றி ஐம்பத்தி ஒன்பது-ஆரம்பப் பள்ளிகள் இருபத்தி எட்டாயிரத்து நானூற்றி மூன்று — கல்லூரிகள் நூற்றிப் பதினென்று-கூட்டுறவுச் சங்கங்கள் பதினேழாயிரத்துமுன்னூறு அந்த மாகாணத்தை வளப்படுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகைநூற்றி ஐம்பத்திரண்டு கோடி ரூபாய்கள்!

பம்பாய் நகரத்தின் தெருக்களில் பதினையாயிரத்து அறுநூற்று ஐம்பது விளக்குகள் எரிகின்றன. அந்த விளக்குகளுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவதில்லை—எல்லாம் 'காஸ்' விளக்குகள். தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் தேவைப்படுவதால் இந்த வகையில் அதை வீணுக்க பம்பாய் கார்ப்பரேஷன் விரும்பவில்லை.

பம்பாயில் நாலைந்து மாடிகளுக்குக் குறைந்த கட்டிடங்கள் மிகமிகக் குறைவு. கீழே கடைகள்—மாடிகளில் குடித்தனங்கள். ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது இருபது குடும்பங்களாவது இருக்கும்.

பம்பாயில் இருக்கும் மீன் காட்சிசாலை (Aquarium) பார்க்க வேண்டியது—வேறு எங்கேயும் அதுமாதிரி இருப்பதாகத் தெரியவில்லை.

பம்பாய் 'டலால்' தெருவில் தூய வெள்ளை 'ஷெர்வானி' அணிந்துள்ள சேட்டுகள் தினந் தினம் கூடுவார்கள். இந்திய உபகண்டம் முழுவதுக்கும் சரக்குகளின் விலைகளை அன்ருடம் நிர்ணயிக்கும் இடம் அதுதான். பஞ்சைகளாகும் பணக்காரர்கள் —பணக்காரர்களாகும் பஞ்சைகள், இருதரப்பாருடைய மன உணர்ச்சிகளை அங்கே நேரில் காணலாம்.

கிராண்டு ரோடு—ஆண்டர்சன் பிரிட்ஜ்—பாரஸ்ரோடு போன்ற சிலசில பகுதிகளில் விபச்சாரிகள் வாழ்கின்றனர். பம்பாய் சர்க்கார் அந்தத் தொழிலுக்கு 'லைசன்ஸ்' கொடுத்திருக்கிறது—அன்ருட மருத்துவக் கண்காணிப்பும் உண்டு! இதைப் படிக்கும் போது வெறுப்பாகத்தான் இருக்கும்; ஆனால் தமிழ்நாட்டில் நடுத் தெருவில் நாதியற்றதுகளாக பெண்களைச் சீரழியவிடும் பண்பாட்டை நினைத்தால், இது எவ்வளவோ மடங்கு உயர்ந்தது என்று தோன்றும்!

பார்ப்பனர்களுடைய உண்மையான மனப்பண்பை உணர விரும்புபவர்கள் பம்பாய்க்குப் போய்ப் பாருங்கள். இங்கே

நரிகளாக உலவுபவர்கள் அங்கே நாகங்களாகச் சீறுகிறார்கள். தென்னாட்டுப் பார்ப்பனர்கள் வடநாட்டில் உருவாக்கியிருக்கும் அக்கிரகாரத்துக்குப் பெயர் மாதுங்கா. ஒவ்வொரு தென்னாட்டுப் பார்ப்பனனும் வடநாட்டானைத் தன் எஜமானாகவும், தென்னாட்டுத் திராவிடனைத் தன் அடிமையாகவும் மதிக்கிறான்.

பம்பாயில் நிறைய திராவிடர்களைச் சந்திப்பீர்கள். ஆனால் அவர்கள் வேட்டி கட்டியவர்களைக் கண்டால் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள். எழுநூற்றித் தொண்ணூற்று நான்கு மைல்கள் தூரம் அவர்களை அப்படி மாற்றியிருக்கிறது. பண்புள்ளவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்—அப்படிப்பட்டவர்கள் எங்கேயும் எப்போதும் யாரோ சிலர்தானே!

பம்பாயில் 'பூட்பாலிஷ்' போடுபவர்கள் ஏறத்தாழ எல்லோருமே தமிழர்கள் தான்!


திருநெல்வேலி மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒழுங்காகப் பணியாற்றாததற்குக் காரணத்தை பம்பாய்க்குப் போனால்தான் புரிந்துகொள்ள முடியும். இங்கேயிருக்கிற நம் இயக்கத் தோழர்கள் அத்தனை பேருமே அங்கே குடியேறிவிட்டார்கள்!

தியாகராசன்—ஆரிய சங்காரன்—வள்ளிநாயகம்—பொற்கோ—அன்புச்செழியன்—இவர்கள் இங்கேயிருந்து போகிற நம்மவர்களுக்கு உறுதுணையானவர்கள். மற்றவர்களுக்கு எப்படியோ, தெரியவில்லை!

பம்பாயில் உள்ள சேரி தாராவி. அங்கே வசிப்போரில் பெரும்பாலோர் திராவிடமக்கள்-பம்பாய் ஆதிகுடிகளும், மற்றவர்களும் அங்கே இருக்கிறார்கள். அந்தப் பகுதிக்குள்ள சிறப்பு, அதைச் சுற்றி ஒருபர்லாங்கு தூரத்துக்கு வீசும்படி துர்நாற்றத்தை உற்பத்திசெய்வது தான்!

தாராவி பகுதியில் ஒருவீட்டில் (சிறிய அறையில்) முப்பதுபேர் படுத்துத் தூங்குவார்கள். தரையில் பத்துப்பேர்— அதற்குமேல் கட்டில்களைப்போட்டு அவற்றின் மேல் பத்துப்பேர்—உத்தரத்தில் கட்டில்களைத் தொங்கவிட்டு அவற்றில் பத்துப்பேர்! எப்படி நிலைமை! இந்த நிலைக்கு அவர்களை ஆக்கியிருக்கும் "அகில இந்திய ஒற்றுமை" நீடூழி வாழட்டும்!

பாண்டிய நாட்டின் பல பகுதிகளில் காணப்படும் நாடார் முக்குலத்தோர் தகராறு பம்பாயிலும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு நாலைந்து கொலைகளையாவது




பம்பாய் 'பிரின்ஸ் ஆப் வேல்ஸ்' மியூசியம்.

செய்து முடிக்கிறது இந்த ஜாதி சனியன்!

தமிழன் தன்னோடு செல்வத்தை எடுத்துப் போக முடியா விட்டாலும் சிரழிவை விடாது கொண்டு போயிருக்கிறான். இங்கே இருக்கிற அரசியல் பூசல்கள் அத்தனையும் அங்கேயும் காணப்படுகின்றன. அங்கேபோய் 'அண்ணாவை' வாதம் செய்யக் கூப்பிடுகிறார்களாம் இங்கே இருக்கும் திராவிட கழக முன்னணி வீரர்கள்!

சிந்திகள் பலர் அகதிகளாக மதிக்கப்படுகின்றனர் பம்பாயில்; சர்க்கார் ஆதரவையும் அமோகமாகப் பெறுகிறார்கள். அனுதாபத்துக்கும் ஆதரவுக்கும் பாத்திரமான அந்த அனாதைகளான அகதிகளில் பலர் மாளிகை வாசிகள்! பட்டுத் துணிகளைத் தவிர வேறு எதையுமே அணியமாட்டார்களாம் பரிதாபத்துக்குரிய அந்த அகதிப் பெண்கள்!

இந்தியாவின் தலைவாயில் (Gateway of India)— அபோலோ பந்தர்—பிரின்ஸ் ஆப் வேல்ஸ் மியூசியம்—ஜுஹு கடற்கரை—சாண்டாக்ரூஸ் விமான நிலையம்—பால்பண்ணை — பதின் மூன்று பிளாட்பாரங்களைக் கொண்ட விக்டோரிய டெர்மினஸ் ரயில்வே ஸ்டேஷன் —பொதுக்கூட்டங்கள் நடக்கும் சௌபாத்தி கடற்கரை. மெரைன் ட்ரைவ் என்ற கடற்கரையை ஒட்டிய பகுதி — வசதியுள்ளோர் வசிக்கும் மலபார் ஹில்ஸ்— தொங்கும் தோட்டம் என்று பெயரிடப் பட்டிருக்கும் தொங்காத தோட்டம் — விக்டோரியா பூங்கா — மகாலக்ஷ்மி குதிரைப் பந்தய மைதானம்-அருமையானதோற்றமுள்ள சர்ச்கேட் பகுதி — பம்பாயில் பார்க்க வேண்டிய முக்கியமான இடங்கள் இவை.



'விக்டோரியா' டெர்மினஸ்

பம்பாயில் காரியத்துக்காக வருபவர்கள்தான் அநேகர் — காட்சிக்காக வருபவர்கள் மிக மிகக்குறைவானவர்கள். எதையும் நின்றுபார்த்து அனுபவிக்க விடமாட்டார்கள். தொடர்ந்து வந்து கொண்டே யிருக்கும் மக்கள் உங்களை வரிசையாகப் போய்க் கொண்டே யிருக்கும் கார்களிலோ, பஸ்களிலோ, ட்ராம்களிலோ, டாங்கா வண்டிகளிலோ தள்ளிவிட்டு மேலே நடப்பார்கள்.

பம்பாய்த் தெருக்கள் வழ வழப்பான கற்களால் ஆனவை. ஆணிவைத்த செருப்புக்காரர்கள் எச்சரிக்கையாக அடியெடுத்து வைக்கவேண்டும். 'பிக் பாக்கட்டு'கள் ஏராளம்—பக்கவாட்டில் சட்டைப்பை வைத்திருப்பவர்கள் 'ஹோஷியாராக' இருக்கவேண்டும்! எதிலாவது இதயத்தை இழந்தால் உடலையும்

உடைமைகளையும் இழக்கும்படியும் நேரிடலாம்!

எலிபெண்டா குகைகளைக் கொண்ட தீவு பம்பாயிலிருந்து ஆறு மைல் தூரத்திலிருக்கிறது ஞாயிற்றுக்கிழமைகளாக இருந்தால் ஒரு ரூபாய் செலவில் அங்கே போய் வந்துவிடலாம் மற்ற கிழமைகளாக இருந்தால், இருபது பேராக போகவேண்டும் அல்லது இருபது பேருடைய கட்டணங்களை நாமே கட்ட முன்வரவேண்டும். அப்போதுதான் படகோட்டி நம்மை ஏற்றிச் செல்வான்.



'அபோலா' பில்டிங்

பம்பாய்! மகத்தான நகரம் — ஆனல் மனித உணர்வுள்ள நகரமா என்று கண்டுபிடிப்பது மிக மிகக் கடினம்! அங்கே இருப்பவை எல்லாம்-மனிதர்கள் உட்பட — இயங்கிக் கொண்டே இருக்கின்றன. இயக்குபவர்கள் யார் என்று கண்டு பிடிப்பதற்கு முடிவதில்லை. இன்பக்கனவுகள் நிறைந்த இதயங்களைக்கொண்ட இளம்பெண்கள் கூட இயந்திரங்களாகவே இயங்குகின்றனர். *

---

வளரும் இலக்கியம்

## தென்னாட்டுச் சிங்கம்

ஆசிரியர்; சிலம்பின் செல்வன், வெளியிட்டோர்: இளங்கோ பதிப்பகம், கிடைக்குமிடம்; கோவை சக்தி காரியாலயம், கோவை. 108, பக்கங்கள் விலை ரூ. 1—8—0.

இந்நூல் ஏற்கனவே வார இதழான 'தென்றல்'லில் தொடர்ச்சியாக வெளிவந்து, படித்தவர்களால் பாராட்டுதல்கள் பெற்றது. இந்நூலாசிரியர் தனது சொல்லாற்றலால் படிப்பவர்க்குச் சலிப்புத் தோன்ரு வகையில் ஆங்காங்கே வீரமும்—உணர்வும் கலந்த உரை நடையால் இந்நூலைப் புதுமையாக்கித் தந்துள்ளார்.

இந்தியாவின் முதல் உரிமைக் குரல் சிப்பாய் கலகத்தின்றும் தானென்று எழுதும் இந்திய சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கு அது கட்டபொம்மன் காலத்திலிருந்து என்று எடுத்துக் காட்டுவதற்கு இவ்வரலாற்று நூல் தெளிந்த சான்ருகும்.

'என்னாட்டு மண்ணுக்குப்பிற எந்நாட்டவர்க்கும் திறைகொடோமென்று தென்னாட்டின் பேர் காத்த செம்மல் கட்டபொம்மன் வரலாற்றை ஒவ்வொரு தமிழ் மகனும் அறிந்து கொள்ள வேண்டியதவசியம். அதற்கு இந்நூல் பெரிதும் உதவுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

—சோளு

# உலக அரங்கில்

'' ஜீவகன் ''

## போர்மோசா

### ஆங்கில – அமெரிக்கப் பிளவு ஏன் ?

சென்ற இதழில் எழுதியிருந்தது போல போர்மோசா பிரச்சினை, ஒரு பெரிய போர் ஏற்படுவதற்கான சூழ்நிலையை உண்டாக்கி விட்டது. ஆனால், ஒரு பெரும்போருக்கு சம்பந்தப்பட்ட யாரும் தயாரில்லை என்பது இப்போது நிச்சயமாகி விட்டது. இதன் நடுவில் தங்களை நேச நாடுகள் என்று கூறிக்கொள்ளும் பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே பெரும் பிளவு ஏற்பட்டுவிட்டது. சீனக் கரையோரமாக இருக்கின்ற, 'சூமாய்', 'மட்சு' தீவுகளை சீனா இணைத்துக் கொள்வதில், இரண்டு நேச நாடுகளுக்கும் பிளவு ஏற்பட்டிருக்கிறது. U. S. இவ்விரண்டும் தன் பாதுகாப்பு எல்லைக்குட்பட்டது, ஆகவே சீனா இதை எடுத்துக் கொள்வதை மறுக்கிறது. ஆனால் பிரிட்டன் இந்த இரண்டு தீவுகளும் சீனாவைச் சேரவேண்டியது தான் என்று அதிகாரபூர்வமாகச் சொல்லிவிட்டது. போர்மோசா சீனாவுடன் சேருவதை எதிர்ப்பதாகக் கூறும் பிரிட்டன் இந்த இரண்டு கரையோரத் தீவுகளை மட்டும் சீனாவுக்கு விட்டுக் கொடுப்பானேன் என்ற ஐயம் யாருக்கும் ஏற்படலாம். ஆனால் இந்த ஐயத்திற்கு, எந்த பத்திரிகையும் உண்மையான காரணத்தை வெளியிட மறுக்கின்றன. அமெரிக்காவுக்குச் சீனா மூலமாக ஒரு விதமான வியாபாரத் தொடர்பும் இல்லாமல் உறவு அற்றுப்போய் விட்டது. ஆகவே, போர்மோசாவை வைத்துக் கொண்டு வேண்டும் என்றே வீம்பு பேசுகிறது. இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. தன் உள்நாட்டு மக்கள் ஆத்திரத்தைத் தணிய வைப்பது, ஏற்கனவே கொரியாவில் 15 லட்சம் அமெரிக்கரை பலியாக்கிய கோபம், அதுபோக, இப்போது சீனாவில் சதி செய்யச் சென்ற 150 அமெரிக்கரை சீனா பிடித்து வைத்திருப்பது. அமெரிக்க சர்க்கார் தமது பராக்கிரமத்தைத் தம் மக்களிடம் பறை சாற்றிய வேகத்தையும், உலக நாடுகள் தனக்கு எப்படி பயப்படுகின்றன என்பதைக் காட்டவும் பலவிதமாக விளம்பரம் தானாகவே செய்து கொண்டது. இந்த ஆட்டம் அனைத்தும் சீனாவிடம் செல்லாதது மட்டும் அல்லாமல், தம் மக்களை இன்னும் அந்நாட்டிற்குத் தம் சர்க்கார் அனுப்பிப் பலியாக்கும் சுயநலத்தைக் கண்டு கொள்ளாமலிருக்க, இந்த போர்மோசா பூச்சாண்டியைக் கிளப்பி யிருக்கிறது. தீவுகளில் பலவற்றை சீனா பிடித்துக்கொள்வதைப் பார்த்த, அமெரிக்க அப்பாவி மக்கள் தம் சர்க்காரின்

பலத்திலும், உண்மையிலும் ஐயம் கொள்ளாமலிருக்க இந்த போர்மோசா பூதத்தைக் கிளப் பிற்று. ஆனால் பிரிட்டன் போர் மோசா வரை மட்டும் அமெரிக் காவுடன் ஒத்துப் போக உடன் பட்டும், இந்தக் கரையோரத் தீவு களை விட்டுக் கொடுக்க இசைந்த தும் ஏன்? தன் நேச நண்பனை இப்படி நட்டாற்றில் ஏன் கை நழுவ விடுகிறது. இந்தத் தீவு கள், சியாங்கிடம் இருந்தவரை, சீனவுக்குத் தாம் அனுப்பிய சரக் குக் கப்பல்களை, சியாங் படைகள் தடுத்தும், வழி பறித்தும், வேண் டிய தொல்லைகளைக் கொடுத்து வந்தது. சிலோனிலிருந்து போகும் ரப்பர், பிரிட்டிஷ்காரர்க ளுடையது. இது போய்ச் சேரு வதில் இதுவரை பலவிதத் தொல்லைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த அமெரிக்க சியாங் கும்பலிலிருந்து இந்தத் தீவுகளை இந்தக் குழப்பமான சூழ்நிலையில் சீனவுக்கு விட்டுக் கொடுப்பதில் பயன்படுத்திக் கொள்கிறது பிரிட்டன். இதன் மூலம், சீனவுக் கும் உலக நாடுகளுக்கும், தான் என்றும் நேர்மைக்குக் கட்டுப் பட்ட நாடு எனக் காட்டிக்கொள் வதும், அதே சமயத்தில் தன் சீன வியாபாரத்திற்கு மறைமுக மாகத் தொல்லைகள் ஏற்படுத்திக் கொண்டிருந்த அமெரிக்க சியாங் கூட்டத்திற்கு சாவு மணி அடிப் பது—ஆக இரண்டு பறவைகளை ஒரே கல்லில் அடித்துக் கொல்கி றது. இதற்குத் தான் அமெரிக் காவில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டி ருக்கிறது. இதிலிருந்து, ஆங் கிலோ-அமெரிக்க நாடுகள், எந்த அளவுக்கு நேர்மையாக நடந்து கொள்ளுகின்றன என்பது ஓரள விற்கு வெளிப்பட்டு விட்டது.

## காமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு

சமீபத்தில் லண்டனில் கூடிய இம்மாநாடு போர்மோசா பற்றி விவாதித்தது. இதைப்பற்றி பல விதமாக அபிப்பிராயங்கள் தெரி விக்கப்பட்டன. சீனவுக்கு, ஐ. நா. வின் பாதுகாப்பு அவை அனுப் பிய அழைப்பை அது மறுத்து விட்டதைப் பற்றி, மேற்கத்திய நாடுகளில், வெகுவாக வருத்தம் ஏற்பட்டதாம். அந்த சமயத்தில் இந்தியா கொடுத்த பதில்தான், சீனவைப் பற்றி இந்தியா எவ்வ ளவு அறிந்திருக்கிறது என்ப தைக் காட்டுகிறது, சீன வர மறுத்து விட்டதே என்று ஒரு நிருபர் கேட்டபோது, சீன இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டிருந் தால் தான் நாங்கள் வியந்திருப் போம். இதைக் கேட்ட மேற்கத் திய நாடுகள், உண்மையிலேயே அதிர்ச்சி அடைந்திருக்கின்றன, பிரிட்டனின், பார்மோசா கொள் கையில் இந்தத் திடீர் 'பல்டி'க் கும் இந்தியாவின் செல்வாக்கு தான் காரணம்.

## பாக்–அரசியல் குழப்பம்

பாக்-அரசியல் நிர்ணய சபையை, கவர்னர் ஜெனரல் கலைத்ததை சட்டத்துக்கு விரோ தம் என்று, பாக்-உயர்நீதி மன் றம் தீர்ப்புச் சொல்லி விட்டது. இப்போது சர்க்கார், பெடரல் மன்றத்திற்கு அப்பீல் செய்தி ருக்கின்றன. நாட்டு மக்களுக்கு எந்த நன்மையும் செய்யாமல், வெறும் மதவெறியை மட்டும், ஊட்டி மக்களை அடக்கி வைக்க முடியாது என்பதை இன்னும் அதை ஆளும் கூட்டம் உணர வில்லை.

# இலங்கைத் திருமுகம்

"துரைசாமி"

## தமிழ் அரசு வாலிப முன்னணி

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிப முன்னணியின் வருடாந்தர மகாநாடு இவ்வருடம் யாழ்ப்பானத்தைச் சேர்ந்த சாவகச்சேரியில் நடைபெற்றது. வாலிப முன்னணியின் தலைவர் அட்வகேட் திரு ஏ. அமிர்தலிங்கம் தலைமை தாங்கினார்.

மகாநாட்டில் கோப்பாய் தொகுதி பாராளுமன்றப் பிரதிநிதி திரு சி. வன்னியசிங்கம் பேசுகையில், அயர்லாந்தில் தேர்தல் காலத்தில் ஒரு பிரதிநிதி பொது மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மீறி நடந்து கொள்வாரேயானால், அவர் பொது மக்களால் சுட்டுக் கொல்லப்படுவார், என்று கூறினார்.

திரு. வன்னியசிங்கம் மேலும் தொடர்ந்து பேசுகையில் 'இலங்கை போனற நாடுகளில் தேர்தல் காலங்களில் அளித்த வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டுவிட்டு எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்துகொள்வது சர்வ சாதாரணமான ஒரு சம்பவமாகி விட்டதென்றும், இது மேற்படி பிரதிநிதிகளைக் குற்றம் சாட்டுவதை விட பொது மக்களே இதற்கு முற்றும் பொறுப்பாளிகளாவர்' என்றும் கூறினார்.

## பொங்கல் விழா

தமிழ்ப் பெரும் மக்களின் திருநாளான பொங்கல் விழா எல்லா வருடங்களையும் விட இவ்வருடம் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பொங்கல் விழா கொண்டாடப்பட்ட ஒவ்வொரு கூட்டத்திலும் பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், உடற் பயிற்சிப் போட்டிகள் போன்ற பல போட்டிகள் இடம் பெற்றன. கல்லூரிகள், கழகங்கள்தோறும் இயல், இசை, நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் முக்கிய இடம் பெற்றன. பொங்கல் விழாவே முத்தமிழ் விழாவாகக் காட்சியளித்தது என்றால் மிகையாகாது.

பொங்கல் விழா பொதுக் கூட்டங்களும், ஊர்வலங்களும் மிகவும் கட்டுப்பாடாகவும் கண்ணியமான முறையிலும் நடைபெற வேண்டுமெனத் தி. மு. க. தலைமை நிலையம் எல்லா கிளைகளுக்கும் தோழமைக் கழகங்களுக்கும் சுற்றறிக்கை விடுத்திருந்தது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். தமிழர் வாழும் இடமெல்லாம் இவ்வருடத்திய பொங்கல் விழா புத்துணர்ச்சியையும், பொலிவையும் ஏற்படுத்தியுள்ளது.

# "கள்வனா? காதலனா?"

ம. ரா. பூபதி, B.A., (Hons.)

பிப்ரவரி மாதம் பத்தாம் நாள் புதன் கிழமை; பூவிருந்த வல்லி உயர்நிலைப் பள்ளியில் எல்லோருடைய உள்ளத்திலும் உவகை பொங்கிக் கொண்டிருந்தது. "மறத் தமிழரே மா விழாக் காண வாரீர்!" என்ற பலகை பள்ளி வாயிலில் நின்று மாணவ மாணவியரை வரவேற்றது.

மாலை நான்கு மணிக்குத் தொடங்கிய தமிழ் விழா முடிவதற்கு ஆறரை மணியாகி விட்டது. 'உலக அரங்கில் நாம்' என்ற பேச்சு முடிந்ததும் மாணவியரின் நடனம், மாணவர் நடிப்பு முதலியன நடைபெற்றன.

"அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு களைத்துப் போய் விழாக் கூடத்தின் படியை விட்டிறங்கினாள் மல்லிகா.

"சும்மாதானா, அப்ளாஸ் வாங்குவது" என்று புன்னகையுடன் அவள் கணவன் அவளை இனிய முகத்துடன் சிரித்துக் கொண்டே வரவேற்றான். கணவன் குறும்புப் பேச்சுக்குக் கடைக் கண்ணால் முற்றுப்புள்ளி வைத்தாள் மல்லிகா.

மல்லிகாவும், ஆறுமுகமும் அந்தப் பள்ளியிலேயே வேலை செய்பவர்கள். எம். ஏ. முடித்தவுடன் ஆறுமுகம் அந்தப் பள்ளியில் ஆசிரியர் வேலையில் அமர்ந்தான். முதல் வகுப்பில் தேறியிருந்தும் அவன் வேறு எங்கும் வேலைக்கு முயற்சி செய்யவில்லை. ஓரிரு கல்லூரியிலிருந்து 'டியூட்டர்' வேலைக்கு வைத்துக் கொள்வதாகக் கடிதங்கள் வந்தன; ஆனால் கட்டுரை நோட்டுப் போருக்குள் புகுந்து திணறுவதை விட, உயர்நிலைப் பள்ளியில் இளங் குழந்தைகட்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது எவ்வளவோ மேலானது என்று எண்ணினான். அதோடு இன்னொரு எம். ஏ. பட்டம் எடுக்க வேண்டும். அதற்கு உயர்நிலைப் பள்ளி வேலைதான் ஏற்றது என்றும் நினைத்தான்.

ஆறுமுகம் பள்ளிக்கு வருவதற்கு முன்னாலேயே மல்லிகா அங்கு ஆசிரியையாக இருந்தாள். ஆறுமுகத்துக்கும் அவளுக்கும் இடையே எப்படித் தொடர்பு ஏற்பட்டது என்பது அவர்களுக்குத்தான் தெரியும். அவர்கள் எப்போது சந்தித்தார்கள், எப்போது பேசினார்கள், மணந்து கொள்வதென்று என்று முடிவு செய்தார்கள் என்பதெல்லாம் ஒருவருக்கும் தெரியாது. ஒரு நாள் காலை செய்தி இதழில் "ஆறுமுகத்துக்கும் மல்லிகாவுக்கும்... ...அன்று பதிவுத் திருமணம் நடந்தேறியது" என்ற செய்தியைக் கண்ட மற்ற ஆசிரியர்கள் எல்லோரும் வியப்படைந்தனர்.

தமிழ் விழாவைப் பற்றிப் பேசிக்கொண்டே ஆறுமுகமும் மல்லிகாவும் வீடடைந்தனர். மல்லிகா மிகவும் சோர்ந்திருந்தாள்; வந்ததும் வராததுமாகக் கட்டிலில் போய்ச் சுருண்டு படுத்து விட்டாள். ஆறுமுகம் பயந்து விட்டான். அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். கொதிக்கும் காய்ச்சல்.

"சொன்னால் கேட்கிறாயா, மல்லி. பள்ளியில் தமிழ் விழாவாக இருந்தால் என்ன? அதற்காக இரவெல்லாம் கண்விழித்து இப்படியா உடம்பைக் கெடுத்துக் கொள்வது" என்று அன்பாகக் கோபித்துக் கொண்ட ஆறுமுகம் தலையைச் சரிப்படுத்தி அவளைப் படுக்கவைத்துப் போர்த்தினான்.

"இப்போ, எனக்கு என்ன வந்துவிட்டது? இலேசான காய்ச்சல். கொஞ்சம் தூங்கினால் சரியாய் விடுகிறது" என்று புன்னகையை வரவழைத்துக் கொண்டு மல்லிகா பதில் சொன்னாள்.

ஸ்டவ்வில் பாலைக் காயவைத்து விட்டு மீண்டும் அவள் படுக்கையை அடைந்தான் ஆறுமுகம்.

"இப்படி எல்லாம் நீங்கள் கவலைப்பட்டால், பிறகு நான் எழுந்து காய்ச்சலே இல்லாதவள் போல நடிக்கத் தொடங்கி விடுவேன்" என்றாள் மல்லிகா.

"உனக்கு எல்லாமேவேடிக்கை தான் மல்லி. நீ சுருண்டு படுத்தால் என் உள்ளமும் சுருண்டு விடுகிறது."

"சரி, ஸ்டவ்வில் பால் கொதி வந்திருக்கும்; பொங்கப் போகிறது, போய்ப் பாருங்கள்" என்றாள் மல்லிகா. ஆறுமுகம் போன பிறகு தன் கணவன் தன்மீது வைத்திருக்கும் அன்பை எண்ணி எண்ணி இன்புற்றாள்.

சூடான காப்பியோடு ஆறுமுகம் திரும்பினான். மனைவியை இரு கைகளாலும் அள்ளி எடுத்து மார்பின்மீது சாய்த்துக்கொண்டு குழந்தைக்குக் குடிப்பாட்டுவது போல காப்பி டம்ளரை அவள் இதழில் பொருத்திக் குடிப்பாட்டினான்.

பாதி குடித்தவள், இடையில் குடிப்பதை நிறுத்திவிட்டு, "நீங்கள் குடித்து விட்டீர்களா?" என்று கேட்டாள்.

"இன்னும் இல்லை. முதலில் காய்ச்சல்காரி தானே குடிக்க வேண்டும்?"

"முடியாது. நீங்கள் குடித்தால் தான் நான் குடிப்பேன்" என்று பிடிவாதம் பிடித்தாள்.

"சரி குடிக்கிறேன்" என்று அவள் குடித்துவிட்ட மீதி காப்பியைத் தன் வாயருகில் கொண்டு சென்றான் ஆறுமுகம். மல்லிகை வெடுக்கென்று தன் கையால் காப்பி டம்ளரைத் தட்டிவிட்டாள். கணீர் என்ற சத்தத்தோடு கட்டிலின் கீழ் விழுந்தது டம்ளர். காபி தரையில் ஓடியது.

"என்ன மல்லி இது. காய்ச்சலாக இருந்தும் சேஷ்டை குறையவில்லை" என்று ஏமாற்றத்தோடு கடிந்து கொண்டான் ஆறுமுகம்.

"பிறகு என்னவாம்? காய்ச்சல்காரி குடித்து மீதியானதை நீங்கள் குடித்தால், உங்களுக்கும் காய்ச்சல் வந்துவிடாதா? அப்புறம் எனக்கு யார் காப்பி குடிப்பாட்டுவது" என்று மல்லிகா சிணுங்கினாள்.

ஆறுமுகம் இலேசாக அவள் கன்னத்தைக் கிள்ளிவிட்டுக் கீழே

சென்று இன்னும் இரண்டு டம்ளர்களில் காப்பி கொண்டு வந்தான்.

"மல்லி, நீ பார்த்துக்கொண்டே இரு. உன் எதிரில் உனக்குக் கொஞ்சம்கூடக் கொடுக்காமல் இரண்டு டம்ளரையும் காலி செய்யப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டு ஒரு டம்ளரைக் குடித்தான். பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் மல்லிகா.

"மல்லி, காப்பி குடிக்காமல் ஏமாற்றிவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறாயா? இந்த டம்ளரை நீதான் குடிக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே ஆறுமுகம் மறுபடியும் அவளைத் தாங்கிக்கொண்டு காப்பியைக் குடிப்பாட்டினான்.

"நீங்கள் ஓட்டலுக்குப் போய் சாப்பிட்டுவிட்டு வாங்கள்" என்று சிறிது தலையை நிமிர்த்திக்கொண்டு கூறினாள்.

"சரி, உனக்கென்ன வேண்டும்? ஒரு டிபன் கேரியர் நிறைய சோறு அடைத்துக் கொண்டு வரட்டுமா?"

"எனக்கு ஒன்றும் வேண்டாம்."

"எனக்கும் ஒன்றும் வேண்டாம்."

"சரி, நீங்கள் சாப்பிட்டுவிட்டு எனக்கும் ஏதாவது வாங்கிக் கொண்டு வாருங்கள்."

"நான் வரும்வரைக்கும் ஆடாமல் அசையாமல் போர்த்திக் கொண்டு தூங்கவேண்டும் தெரிகிறதா?" என்று கூறிவிட்டு வெளியேறிய ஆறுமுகம் அரை மணிக்கெல்லாம் சிறு பொட்டலத்துடன் திரும்பினான்.

மல்லிகாவுக்குத் தூக்கம் வரவில்லை; உடம்பு வேர்த்துக் கொட்டியது. காய்ச்சலாக இருந்தாலும் கணவன் அன்பிலும், வேர்வையிலும் மூழ்கியிருப்பது அவளுக்குத் தனி இன்பத்தைக் கொடுத்தது.

ஆறுமுகம் வருவதைக் கண்ட அவள், "இதற்குள்ளாகவா சாப்பிட்டு விட்டீர்கள்? நான் கண்ணைக்கூட மூடவில்லையே" என்றாள்.

"என்னை யென்ன ஓட்டல் சாப்பாட்டு ராமன் என்று எண்ணிக்கொண்டாயா? இலையில் உட்கார்ந்தேன்; ஏதோ போட்டான். இரண்டு வாயாக விழுங்கி விட்டுத் திரும்பி விட்டேன். உனக்கு ஒரு பொட்டலம் வாங்கி வந்திருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு கையிலிருந்த பொட்டலத்தை அவளிடம் காட்டினான்.

"என்ன அது?" என்று ஆவலோடு கேட்டாள் மல்லிகா."

"அவ்வளவும் ஆஸ்ப்ரோ. நீ இப்பொழுது எல்லாவற்றையும் விழுங்கியாக வேண்டும்" என்று சொல்லிவிட்டுச் சமையலறைக்குச் சென்று கொஞ்சம் வெந்நீர் கொண்டு வந்தான்.

"உங்களுக்கும் காய்ச்சல் வந்துவிட்டாலும் வந்துவிடும்; எதற்கும் வருவதற்கு முன்னாலேயே நீங்கள் பாதிப் பொட்டலத்தைச் சாப்பிட்டு வையுங்கள்" என்றாள் மல்லிகா.

"சரி, உன் விருப்பம்" என்று சொல்லிப் பொட்டலத்தைப் பிரித்தான். அதனுள் இரண்டு 'ஜாங்கிரி'கள் இருந்தன.

"மல்லி, பாதிப் பொட்டலந்தான் உனக்கு" என்றான் ஆறு

முகம். பிறகு இரண்டு ஆஸ்ப்ரோ வில்லைகளை அவள் வாயில் போட்டுக் கொஞ்சம் தண்ணீர் ஊற்றினன். அதை அவள் விழுங்கியதும் ஜாங்கிரியைச் சிறு சிறு துண்டுகளாக்கி அவளுக்கு ஊட்டினன்.

"இனிமேல் நான் மாதத்துக்கு இரண்டு முறை காய்ச்சலென்று சொல்லிப் படுத்துக் கொள்ளப் போகிறேன்."

மல்லிகாவின் தளிர்க் கரத்தை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்ட ஆறுமுகம், "ஏன்? ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காய்ச்சலாகப் படுத்துக்கொள். உனக்கு 'நர்ஸ்' வேலை செய்தால் எனக்கும் பொழுது இன்பமாகக் கழியும்" என்ருன்.

"ஆசையைப் பாரு" என்று மல்லிகா நெற்றியைச் சுளித்தாள்.

"அடடா, நெற்றியின் அழகே போய்விட்டதே" என்று ஆறுமுகம் அவள் நெற்றியைத் தன் விரல்களினல் மெதுவாகத் தடவிக் கொடுத்து, அதன் மீது சுருண்டு விழுந்திருந்த கூந்தலைச் சிறிது விலக்கினன்.

அவன் அன்புக் கரத்தைத் தன் மெல்விரல்களில் அழுத்திப் பிடித்துக் கொண்டாள் மல்லிகா.

"என் அம்மாவின் அன்பைத் துரும்பாக்கி விடுகிறது உங்கள் அன்பு" என்று இலேசாகச் சிரித்துக் கொண்டு கூறினள்.

"சரி, சரி. பேசாமல் தூங்கு" என்று குனிந்து அவள் நெற்றியில் ஒரு முத்தத்தைப் பொறித்துவிட்டு, ஆறுமுகம் அவள்முகத்தை மட்டும் விட்டுவிட்டு, உடல் முழுவதையும் போர்வையால் போர்த்தினன்.

"தூக்கம் வரவில்லையே." என்ருல் மல்லிகா.

"தூக்கம் வராவிட்டால், உன் முதுகைத் தட்டிக் கொண்டு பாடட்டுமா?"

"பாட வேண்டாம்."

ஆறுமுகம் அவள் முதுகை மெதுவாகத் தட்டிக் கொடுத்தான். குழந்தையைப் போல அந்த அன்புத் தட்டுகளை அனுபவித்துக் கொண்டே மல்லிகா உறங்கிவிட்டாள்.

* * *

மாலைக்காட்சி சினிமா பார்த்துவிட்டு மல்லிகாவுடன் திரும்பிக் கொண்டிருந்தான் ஆறுமுகம். மேகம் மூடியிருந்த வானம் திடீரென்று கண்ணைப் பறிக்கும் ஒளியோடு மின்னியது. மின்னலைத் தொடர்ந்து இடி இடித்தது. இடியோசையால் கனவுலகத்திலிருந்து விழித்தெழுந்த ஆறுமுகம் தன் காதுக்கருகில் அலாரத்தின் மணியோசையைக் கேட்டான். படுக்கையின் பக்கத்தில் மல்லிகா அலாரத்தை வைத்துக் கொண்டு புன்னகை செய்தாள்.

"என்ன மல்லி, உடம்பு சரியாகி விட்டதா?" என்று கேட்டுக்கொண்டே அவள் கன்னத்தை லேசாகக் கிள்ளினன்.

"என் உடம்பு சரியாகி விட்டது. நீங்கள் போய் பல் துலக்கிக்கொண்டு வாருங்கள். காப்பி தயாராக இருக்கிறது" என்று மல்லிகா கட்டளையிட்டாள்.

அன்று பள்ளியில் எல்லா மாணவர்களுக்கும் இனிப்பு வழங்கப்பட்டது, எல்லோருடைய முகத்திலும் மகிழ்ச்சி புலப்பட்டது. ஆறுமுகத்தின் மனம் மட்டுமே குழம்பிக் கொண்டிருந்தது. அன்றைய தபாலில் மது

ரைக் கல்லூரியில் டியூட்டர் வேலை ஏற்றுக் கொள்ளும்படி அவனுக்கு ஒரு கடிதம் வந்திருந் தது. பள்ளிச் சம்பளத்தை விட அந்த வேலையில் அவனுக்கு கூடு தலாக இருபது ரூபாய் கிடைக் கும். மேலும் இரண்டொரு ஆண் டுகளில் விரிவுரையாளராக ஆவ தற்கும் வாய்ப்பு ஏற்படலாம். மதுரைக்குச் சென்று வேலையை ஏற்றுக்கொள்வதா, வேண்டாமா என்று தான் அவன் மனம் குழம் பியது. மதுரை செல்வதற்கு மல்லிகா ஒப்புக்கொள்வாளா என்ற சந்தேகமும் வேறு அவனை வாட்டியது. இந்தக் குழப்பமான நிலையில் அவன் ஆசிரியர்கள் அறையில் அமர்ந்திருந்தபோது தான்,

"சார், நீங்கள் மிட்டாய் சாப் பிட்டீர்களா ?" என்று அவனைக் கேட்டாள் மல்லிகா.

"இல்லை, மேடம்" என்றான் ஆறுமுகம்.

"அப்படியானால், இதைச் சாப்பிடுங்கள்" என்று அவனி டம் ஒரு மிட்டாயை நீட்டினாள்.

"மிகவும் இனிப்பா யிருக்கி றது" என்று உடனே கூறினான் ஆறுமுகம்.

"சாப்பிடுவதற்கு முன்பேயே இனிக்கிறதா ?" என்று வெடுக் கென்று கேட்டுவிட்டாள் மல் லிகா. பக்கத்திலிருந்த இரண் டொரு ஆசிரியர்கள் கிண்டலா கச் சிரித்தனர். ஆறுமுகமும் சிரித்துக் கொண்டு பேசாமல் இருந்தான்.

மாலை பள்ளி முடிந்தவுடன் வீட்டுக்குப் புறப்படுவதற்கு மல் லிகா தயாரானாள். ஆறுமுகம் அவளிடம் தனக்கு வந்த கடிதத் தைக் கொடுத்து,

"இதை வீட்டுக்குக் கொண்டு போங்கள் மேடம். நான் பிறகு வருகிறேன்" என்றான்.

கடிதத்தை வாங்கிக் கொண்டு வீடு வந்த மல்லிகா, புத்தகங் களை மேஜைமீது வைத்துவிட்டு முதல் வேலையாக அக் கடிதத் தைப் படித்தாள். ஆறுமுகம் உடனே புறப்பட்டு வந்து மது ரைக் கல்லூரியில் வேலையில் சேரவேண்டுமென்று அதில் குறிப்பிட்டிருந்ததைக் கண்டு திடுக்கிட்டாள்.

மணமாகி இன்னும் ஆறு மாதங்கள் கூடச் சரியாக ஆக வில்லை. அதற்குள் பிரிவதென் றால்...... அவள் மனம் ஆறுமு கத்தின் பிரிவை எண்ணித் தத் தளித்தது. முன் இரவு இரண்டு பேருமாகச் சேர்ந்து கொஞ்சி யதை எல்லாம் நினைத்தாள். சமையல் கட்டில் அவளுக்கு வேலையே ஓடவில்லை.

மாலை நெடுநேரம் சென்ற பிறகுதான் ஆறுமுகம் வீட்டுக்கு வந்தான். கடிதத்தை மல்லிகா பார்த்து, அதனால் ஏற்படும் துன்பம் சிறிது குறைந்த பிறகே வீட்டுக்குப் போக வேண்டும் என்று நினைத்தே அவன் இவ்வி தம் இரவானதும் வந்தான்.

உணவு உண்ணும் போது இரு வருவரும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளவில்லை. இன்னும் அவள் உள்ளம் சரியான நிலைக்கு வரவில்லை என்று ஆறுமுகம் நினைத்தான். அவளை நிமிர்ந்து நோக்காமலேயே உணவை முடித் துக்கொண்டு தன் அறைக்கு வந் தான். நாற்காலியில் அமர்ந்த தும் மேஜையின் மீதிருந்த பால் டம்ளர் அவன் கண்ணில் பட்டது.

அதன் பக்கத்தில் ஒரு புத்தகம் விரித்து வைக்கப்பட்டிருந்தது.

"இன்று நம்மோடு பேசுவதில்லை என்று முடிவு செய்துவிட்டாள்போல இருக்கிறது" என்று நினைத்துக்கொண்ட ஆறுமுகம் அந்தப் புத்தகத்தின் தலைப்பை நோக்கினான். நற்றிணை புத்தகத்தில் 34-வது பக்கம். அந்தப் பக்கத்தின் தலைப்பிலேயே இருந்த பாடலைப் படித்த ஆறுமுகத்தின் உள்ளம் திடுக்கிட்டது.

அது நற்றிணையில் 28-வது பாட்டு; முதுகூற்றனார் என்ற புலவரால் பாடப்பட்டது. கணவன் பொருள் தேடுவதற்காக மனைவியைப் பிரிந்து சென்றுவிடுகிறான். மனைவி மிகுந்த துயரோடு வீட்டில் இருக்கிறாள். அவளைப் பார்த்துவிட்டுப் போவதற்காக அவளுடைய உயிர்த் தோழி வருகிறாள். அத் தோழியிடம் மனைவி தன் துன்பத்தைக் கூறுகிறாள். இப்படித் தலைவி தன் துன்பத்தைக் கூறுவது தான் அந்தப் பாடல்! பாடல் இது தான்:

"என் கைக் கொண்டு தன் கண் ஒற்றியும்,
தன் கைக் கொண்டு என் நல்நுதல் நீவியும்,
அன்னை போல இனிய கூறியும்,
கள்வர் போலக் கொடியன் மாதோ!
மணி என இழிதரும் அருவி, பொன் என
வேங்கை தாய, ஓங்குமலை அடுக்கத்து,
ஆடுகழை நிவந்த பைங்கண் மூங்கில்,
ஓடுமழை கிழிக்கும் சென்னிக்
கோடு உயர் பிறங்கல் மலைகிழவோனே"

[நற்றிணை-28.]

[நுதல் = நெற்றி; நீவியும் = தடவியும்; மாதோ = அசை; இழிதரும் = ஓடி வரும்; வேங்கை = வேங்கை மரத்தின் மலர்; தாய = உதிர்ந்து பரந்த; அடுக்கம் = மலைப் பக்கம்; கழை = மூங்கில்; நிவந்த = உயர்ந்து வளர்ந்த; மழை = மேகம்; சென்னி = உச்சி; பிறங்கல் = மலை.]

தலைவியின் கணவன் உயர்ந்த மலைக்குத் தலைவன்; அம்மலையின் உச்சி மேகங்களைக் கிழிக்கின்றது; அதன் சாரலில் மூங்கில்கள் ஓங்கி வளர்ந்திருக்கின்றன, வேங்கை மலர்கள் கீழே உதிர்ந்திருப்பது பொன்னைப் பரப்பி வைத்திருப்பது போலத் தோன்றும். மணிபோல் தெளிந்த நீரையுடைய அருவிகள் சலசல வென்று இன்னிசையுடன் ஓடிக்கொண்டிருக்கும். இப்படி மிகவும் வளமான மலைக்கு உரியவன் கணவன் என்றாலும் அவனை மனைவி கள்வனுக்கு ஒப்பாகக் கூறுகிறாள்.

அவன் மனைவியின் கரத்தை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான்; தன் கையால் அவள் நெற்றியைத் தடவிக் கொடுத்தான். தாயைப் போல அவளுக்கு இனிய மொழிகளை எல்லாம் கூறி இன்புறுத்தினான். இவ்வளவையும் வெளிப்படையாகச் செய்து கொண்டே உள்ளத்தை அவன் பொருள் தேடப் போவதில் வைத்திருந்தான். அதற்காகத் திடீரென்று பிரிந்து விட்டான். ஆகவே தலைவி அவனைக் கள்வன் என்று குறிப்பிட்டதில் தவறில்லை என்று ஆறுமுகத்துக்குத் தோன்றியது.

அவன் கள்வன் என்றால் தானும் கள்வன்தானே என்ற எண்ணம் அவனுக்கு எழுந்தது. களங்கமற்ற உள்ளத்தில் கல் எறிந்து விட்டோம் என்று அவன்

நினைத்தான். பேசாமடந்தையாகி விட்ட மல்லிகாவின் மனத்தை அந்தப் பாடல் ஆறுமுகத்துக்கு நன்றாக விளக்கிவிட்டது.

எதிரே மாட்டியிருந்த 'பர்மா ஷெல்' காலண்டரைப் பார்த்த படி சிந்தனையில் ஆழ்ந்தான். இராமன் காட்டிற்குப் போகும் போதுகூட சீதையைத் தனியாக விட்டுவிடாமல் தன்னோடேயே அழைத்துச் செல்லும் காட்சி அந்தக் காலண்டரில் தீட்டப்பட்டிருந்தது.

மதுரைக் கல்லூரிக்குப் போவதால் அவனுக்கு மாதம் இருபது ரூபாய் கூடுதலாகக் கிடைக்கும். ஆனால் ஹாஸ்டலில் இருந்தால் அது எப்படியும் செலவாகத்தான் போகிறது. இரண்டொரு ஆண்டுகளில் விரிவுரையாளனாக ஆய்விடலாம் என்று அவன் கனவு கன்டான். ஆனால் அதுகூட நிச்சயமில்லையே. ஆறுமுகமும் மல்லிகாவும் சம்பாதித்த தொகை அவர்கள் எளிய இன்ப வாழ்க்கைக்குப் போதுமானதாகவே இருந்தது. அப்படி இருக்கும்போது அவன் எதற்காக அவளைப் பிரிந்து செல்ல வேண்டும்? பிரிவதால் இன்ப வாழ்வு கெடுகிறது; ஆனால் பொருள் சிறிது அதிகமாகக் கிடைக்கிறது. பிரியாவிட்டால் பொருள் குறைவாகக் கிடைக்கும்; ஆனால் வாழ்வு மலர்ச் சோலையாக இருக்கும். குறை வருவாய், நிறை வாழ்வு; நிறை வருவாய், குறை வாழ்வு, இந்த இரண்டில் எதைத் தேர்ந்தெடுப்பது என்று ஒரு கணம் எண்ணினான்.

மல்லிகையின் உருவம் அவன் மனக் கண்ணில் தோன்றி, "என்னைவிட்டுப் பிரியத்தான் போகிறீர்களா?" என்று கேட்டது. சாய்ந்த நோக்கோடு அந்த உருவம் அவனைப் பார்த்த பார்வையில் அவன் கட்டுண்டான். மல்லிகாவோடு சேர்ந்து வாழ்வதால் பொருள் நிறையக் கிடைக்காது. பொருளுக்காகப் பிரிந்து சென்றால் அவளோடு சேர்ந்து வாழும் காதல் வாழ்வு கிடைக்காது. ஆனால் பொருள் எத்தனை நாள் நிலைத்திருக்கும்? குளத்தில் மீன் ஓடினால் பின்னாலேயே அதன் பாதை மறைந்து வருவதைப் போல, விரைவிலேயே அழிந்துவிடும். ஆனால் காதல் வாழ்வு அப்படிப்பட்டதல்ல; வாழ்க்கை முழுதும் நிலைத்து இன்பத்தைக் கொடுக்கும். மல்லிகா தன் மணிக் கழுத்தைச் சிறிது சாய்த்தவாறு நோக்கும் நோக்குக்கு இணையாக எந்தப் பொருளையும் கூற முடியாது. உலகத்தையே மரக்காலாகக் கொண்டு, ஏழு மரக்கால் நிறைய செல்வத்தை அளந்து கொட்டினாலும், அது அவளுடைய பார்வைக்கு ஈடாகாது என்ற எண்ணம் ஆறுமுகத்துக்கு உதித்தது. உடனே அவன் மனத்தைவிட்டு மதுரை சிதறியது; டியூட்டர் வேலை தூள் தூளானது.

விரைவாக எழுந்து சமையலறைக்குச் சென்றான் ஆறுமுகம். மல்லிகாவைக் காணவில்லை. அவள் தன் அறையில் மேஜை மீது தலையை வைத்துக்கொண்டு கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தாள். அவள் தலைமயிரை அன்போடு கோதிக்கொண்டே,

"ஏன் மல்லி அழுகிறாய், நான் போகப்போவதில்லை" என்றான்.

நீர் நிறைந்த கண்களில் மகிழ்ச்சி படர ஆறுமுகத்தின் முகத்தை நோக்கினாள்.

"எனக்காகவா போகவில்லை?"

"இல்லை மல்லி, நம் இன்ப வாழ்வு கெடக்கூடாதென்று" என்றான். அவள் இன்னும் உண்ணவில்லை என்பதை அறிந்துகொண்டு, அவளை அழைத்துச் சென்று அன்போடு உணவு பரிமாறினான். உணவு முடிந்ததும் இருவரும் ஆறுமுகத்தின் அறைக்கு வந்தனர்.

"இன்னும் நீங்கள் பால் குடிக்கவில்லையா? ஆறிப்போயிருக்குமே. போய்சூடாகக் கொண்டு வருகிறேன்" என்று ஆறிப்போயிருந்த பாலை எடுத்துக்கொண்டு சென்று, சிறிது நேரம் கழித்து இரண்டு டம்ளர் இளஞ் சூடான பாலோடு திரும்பினாள்.

"இந்தாங்க, குடிக்கும் நிலையில் இருக்கிறது" என்று ஒரு டம்ளரை நீட்டினாள்.

"முடியாது மல்லி. வழக்கமாகக் குடிப்பது போல்தான் குடிப்பேன்."


உதட்டைக் கடித்தவண்ணம் மல்லிகா தன் கரத்தால் அவனுக்குப் பாலைக் குடிப்பாட்டினாள். பிறகு மற்றொரு டம்ளரில் இருந்த பாலை மல்லிகாவுக்கு ஆறுமுகம் குடிப்பாட்டினான். மெதுவாகப் பாலை அருந்திக் கொண்டிருந்த மல்லிகாவின் கண்ணில் நற்றிணை புலப்பட்டது. தான் திருப்பி வைத்திருந்த பக்கத்துக்கு மாறாக வேறொரு பக்கம் இருப்பதைக் கண்டாள். 34-வது பக்கத்துக்கு மாறாக இருபதாவது பக்கம்! இருபத்தெட்டாவது பாட்டுக்கு மாறாக பதினாறுவது பாட்டு!

"புணரில் புணராது பொருளே;
பொருள் வயின்
பிரியில், புணராது புணர்வே;
ஆயிடைச்
சேர்பினும் செல்லாய் ஆயினும்,
நல்லதற்கு
உரியை; வாழி என் நெஞ்சே!
பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடும்மீன் வழியின் கெடுவ;
யானே
விழுநீர் வியல் அகம் தூணி ஆக
எழுமாண் அளக்கும் விழுநிதி
பெறினும்,
கனம் குழைக்கு அமர்ந்த சே அரி
மழைக் கண்
அமர்ந்து இனிது நோக்கமொடு
செகுத்தனன்;
எனைய ஆகுக; வாழிய பொருளே!"
[நற்றிணை-16].

[புணரில் = தலைவியொடு வாழ்ந்தால்; வயின் = காரணமாக; சேர்பினும் = சென்றாலும்; பொய்கை = குளம்; நாப்பண் = நடுவில்; வழியின = வழியைப்போல; வியல் அகம் = அகன்ற உலகம்; தூணி = மரக்கால்; கனம் குழை = குழையணிந்த தலைவி; சே அரி = சிவந்த வரிகளை உடைய; மழைக்கண் = இருண்ட கண்; நோக்கமொடு = பார்வையால்; செகுத்தனன் = கட்டுண்டேன்; எனைய ஆகுக = இனிய பொருள் எப்படி ஆனாலும் ஆகட்டும்.]

சிறைக்குடி ஆந்தையாரால் பாடப்பட்ட இந்தக் கவிதையைப் படித்ததும், மல்லிகா தன் கணவன் தன்னை எவ்வளவு தூரம் போற்றி நேசிக்கிறான் என்பதை உணர்ந்து மகிழ்ந்தாள். களிப்புக் கண்களோடு கழுத்தை வளைத்து ஆறுமுகத்தை நோக்கினாள்; அக்களிப்புச் சிமிழை மூடுவதுபோல, ஆறுமுகம் அவள் கண்ணைத் தன் இதழ்களால் மூடினான்.

# கலை உலகம்



வேல்விழியை நாணேற்றி நிற்கும்
இவ்விற்புருவ மங்கை, வெளிவர
விருக்கும் 'குலேபகாவலி'யில்
**ஜி. வரலட்சுமி**

# நம் கருத்து

யுனைடெட் ஆர்ட் பிலிம்ஸாரின்

## வள்ளியின் செல்வன்

டைரக்ஷன் :
கொத்தமங்கலம் சுப்பு

நடிகர்கள் :
சுந்தரிபாய், லலிதா, வனஜா
R. கணேசன், S. V. சுப்பையா,
T. S. துரைராஜ்

ஜெமினியின் "வள்ளியின் செல்வன்" என்ற படத்தைப் பார்க்கும்போது சிலருக்கு நெஞ்சை அடைத்துக் கொள்ளும். சிலருக்கு அழுகை வரும். இன்னும் சிலருக்கு "இது நடக்குமா? இது சாத்தியமா?" என்ற எண்ணங்கள் எழும்!

கதை: வடநாட்டில் எடுத்த "ஔலத்" என்ற இந்திக் கதையை மட்டுமல்ல; காட்சிக்குக் காட்சி விட்டுவிடாமல் அப்படியே அப்பட்டமாகத் தழுவி எடுத்த படம் இது. இதிலே வருகிற சில காட்சிகள் நம்ம ஊர் பெண்களுக்குப் பிடிக்கும் என்று எண்ணி ஜெமினி நன்ருக ஏமாந்து விட்டது.

ஏனெனில் நமது பெண்களில் பலர், "இது என்ன விந்தை! இப்படியும் ஒருத்தி, தனக்குக் குழந்தை பிறக்கவில்லை என்பதற்காக, பொய்யாகக் கருப்பம் தரித்திருப்பது போல் வேஷம் போடுவாளா! ரொம்ப நன்ருக இருக்கிறது! நாலுபேர் அதை நம்ப வேண்டாமா?" என்று படத்தைப் பார்க்கும்போதே பேசவாரம்பித்து விடுகிருர்கள். ஜெமினியின் தழுவல்—கதையைப் பொறுக்கி இருப்பதில் நழுவிவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

தாயின் உணர்ச்சி என்பது தனிப்பட்டது. எந்தக் கட்டுக் காவலையும் மீறும் ஆற்றல் அதற்கு உண்டு. தன்னுடைய எசமானி அம்மாளுக்குக் குழந்தையில்லை என்பதற்காகத் தன் மகனை இரகசியமாகத் தந்து உதவுவது, அது காப்பாற்றப்படுவது—இவை எல்லாம் கதையில் தான் சாத்தியம். அதற்குப் பதிலாக ஆசையுடன் எடுத்து வளர்ப்பதாகப் பகிரங்கமாகவே செய்யப்பட்டிருக்குமானுல், கதையில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும், அசட்டுத்தனமான இரகசியத்துக்கு அவசியம் ஏற்பட்டிருக்காது. "இது நடக்கக்கூடிய காரியமா?" என்று யாரும் கேட்கமாட்டார்கள்.

வசனம்: பேருக்கு இருக்கிறது. எதிர்பார்க்கப்படும் உணர்ச்சி இல்லை. இந்தக் கதைக்குரிய வசனத்துக்கு அது இன்றியமையாதது. ஆனுல் ஜெமினி கதை இலாகாவில் இரண்டு, மூன்று பேனுக்கள் சிரமப்பட்டும், வசனம் நன்கு அமையவில்லை. தாரணமாக இருக்கிறது.

நடிப்பு: வள்ளியாக நடித்திருக்கும் சுந்தரிபாய், அவளது கணவன் கந்தனுக வரும் எஸ். வி. சுப்பையா, பணக்காரியாக நடிக்கும் லலிதா —இவர்கள் நன்கு நடித்திருக்கிருர்கள். சஹஸ்ரநாமம் – ஜெமினி கணேசன்—சுமார். துரைராஜும் அப்படியே. ஏனெனில் அவருக்குப் படத்தில்

சந்தர்ப்பம் குறைவு. வனஜா வின நடிப்பைவிட நடனம் சிறிது பாராட்டும்படி இருக்கிறது.

இரண்டு சிறுவர்கள்—பாபுஜி யும், முரளியும் சக்கைப்போடு போட்டிருக்கிறார்கள்! அவர்க ளுக்கு 'நடித்திருக்கிறோம்' என்று தெரியாத காரணத்தினால்.

பாடல்கள்: குறிப்பிட்டுச் சொல்ல எதுவும் இல்லை. ஆனால் கர்நாடக மெட்டுக்களில் அமைத் திருக்கிறார்கள். எனவே, வட நாட்டு மெட்டுக்கள்—ஏற்கெனவே கேட்டவை சில காதில் வந்து மோதி அலுப்பேற்பட வைக்க வில்லை! எம். எல் வசந்தகுமாரி யும், சீர்காழி கோவிந்தராசனும் மற்றவர்களைவிட ஆளுக்கு ஒரு பாட்டை இனிமையுடன் இசைத் திருக்கிறார்கள்

டைரக்ஷன்: கொத்தமங்கலனர் (சுப்பு) செய்திருக்கிறார் ஏற்க னவே இந்திப்பட வடிவில் ஓர் அமைப்பு இருந்துவிட்டபடியால் அப்படியே தமிழாக்கித் தந்து விட்டார். எனவே இவரது டைரக்ஷன் திறமைக்கு ஏது இடம்? இருந்தால் தான் இவராக என்ன செய்துவிட முடியும்?

ஒளி, ஒலிப்பதிவுகளில் ஜெமினி தரத்துக்குக் குறைய வில்லை. ஆனால் இப்படி ஒரு கதையைப் படமாக்குகிற 'பெரு மை'க்கு வடக்கே ஏன் வாசன் போகவேண்டும் என்று கேட்கி ரேம். ஏனெனில் கதையமைப் பிலே அப்படி எந்தவ் தமான 'பிர மாதமும்' இல்லை.

ஆனால், முபன்ருல் ஹாஸ்ய நடிகையான சுந்தரிபாயைக்கூட சோகரச நடிப்பு, நடிக்கச்செய்ய முடியும். சுப்பையா என்ற பழைய நாடகமேடை, நல்ல நடி கரை இதுநாள் வரை யாரும் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வில்லை. ஜெமினி அவருக்கு வேலைக்காரன் வேடத்தைப் பொருத்தமாக அளித்து அவரு டைய திறமையை வெளிப்படுத்தி விட்டது என்று இப்படம் சொல் லிக் காட்டுகிறது.

நமது பெண்கள், "ஐயோ பாவம்!" என்று சொல்லும் கட் டங்கள் ஒன்று இரண்டு வருகின் றன.

கதையில் இருக்கிற சில நம்ப முடியாத கட்டங்களைப் பொருட் படுத்தாமல், இந்தப் படத்தில் சிலர் நன்கு நடித்திருப்பதற்கா கப் பார்க்கலாம்

இது ஒரு யுனைட்டட் ஆர்ட் பிலிம்ஸாரின் தயாரிப்பு. ஜெமினி வெளியீடு.

'கேயம்'

## யார் தெரியுமா?

### பதில்!

சென்ற இதழில் 'யார் தெரி யுமா?' என்ற தலைப்பில் வந்த கேள்விக்கு இதுவே பதில்!

1. ப்ரண்ட் இராமசாமி.
2. வைஜயந்திமாலா.
3. டி. ஆர். மகாலிங்கம்.
4. ஏ. எம். ராஜா, எம். ஏ
5. சிவாஜி கணேசன்.




## செல்லப்பிள்ளை

ஏவி எம். மின் "செல்லப் பிள்ளை"யை இப்போது இரவு பகலாகக் கவனிக்க வாரம்பித்து விட்டார்கள். சென்ற இரண்டு ஆண்டுகளாக அவனுக்குக் கொடுத்த 'செல்லம்' எல்லாம் போதும் என்று எண்ணி, அவனுக்குச் சற்றும் ஓய்வு தராமல் 'சுட' வாரம்பித்து விட்டார்கள்! டைரக்டர் எம். வி. ராமன் மேற்பார்வையிட இப்படத்தில் கே. ஆர். ராமசாமி, பாலையா, தங்கவேலு, பந்துலு, கண்ணாம்பா, சாவித்திரி நடித்து வருகிறார்கள். இதற்குரிய வசனங்களைச் சரிப்படுத்த ஜாவர் சீதாராமன் முனைந்திருக்கிறார்.

ஏற்கனவே டைரக்டர் நீலகண்டன் எழுதிய வசனங்களையும், முக்கால்பாகம் எடுத்த படத்தையும் மூலையில் போட்டுவிட்டு, தலைப்பு மட்டும் அதையே வைத்துக்கொண்டு இப்படத்தை ஏவி. எம். எடுத்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேபடம் 'வதின' என்ற பெயரில் தெலுங்கிலும் எடுக்கப்படுகிறது.

## நீதிபதி

விஜயா பிலிம்ஸ் என்ற பெயரில் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமியும் இன்னும் சிலரும் சேர்ந்து ஆரம்பித்து இருக்கும் படத்தின் பெயர் இது. இதற்குரிய கதையை சோலைமலை எழுதிக் கொடுத்து இருக்கிறார். நடிகர்கள் தேர்தல் நடந்து வருகிறது. கே. ஆர். ராமசாமியுடன் அஞ்சலி நடிப்பார் என்று தெரிய வருகிறது.

## கேவா கலரில் அலிபாபா

மாடர்ன் தியேட்டர்ஸார் 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' என்ற படத்தை கேவா கலரில் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இப்படத்தை ராம்னாத் டைரக்ட் செய்வாரென்றும், இதில் பத்மினி முக்கிய பாகமேற்று நடிப்பாரென்றும் தெரிய வருகிறது. நடனங்களும், தந்திரக் காட்சிகளும் குறைவிருக்காதென நம்பலாம்.



### கள்வனின் காதலி


ரேவதியின் சொந்தப் படமாக 'கல்கி'யின் கதையான 'கள்வனின் காதலி' உருவாகி வருகிறது அதில் சிவாஜி, சாரங்கபாணி, துரைராஜ், குசலகுமாரி முதலியோர் நடித்து வருகிறார்கள். கதாநாயகி கல்யாணியாக பானுமதி ஏற்பாடு செய்யப்படலாம். எஸ். டி. சுந்தரம் வசனம் எழுத, வி. எஸ். ராகவன் டைரக்ட் செய்து வருகிறார். சென்ற வாரம், கார்வார் சங்குப் பிள்ளையிடம் முத்தையன் பாய்ந்து சென்று சண்டைபோடும் கட்டம் ஒன்றை மிகுந்த உணர்ச்சியுடன் படமாக்கியுள்ளார்கள்.

### போர்ட்டர் கந்தன்

நரசுவின் சொந்தப்படமான இது, முடிவடையும் கட்டத்தை நெருங்கி இருக்கிறது. ரயில்வே தொழிலாளி ஒருவனுக்கும், அவனுடைய சகோதரன் ஒருவனுக்குமுள்ள உள்ளப் போராட்டத்தை சித்தரிக்கும் சிறந்த கதை இது என்று தெரிய வருகிறது. இதில் எம். கே. ராதா, துரைராஜ், முஸ்தபா, டி. பாலசுப்பிரமண்யம், ஜி. வரலட்சுமி நடித்து வருகிறார்கள். வேம்பு டைரக்ட் செய்கிறார். நரசுவுக்கு இந்த கந்தனாவது வெற்றிக் கொடியை நாட்டுவான் என்று எதிர்பார்க்கிறோம்!

### முதல்தேதி

பத்மினி பிக்சர்ஸின் 'முதல் தேதி'யை முடிக்க இரண்டு இடங்களில் ரேவதி சியாமளா படப்பிடிப்பு நிலையங்களில் படம் சுடப்பட்டு வருகிறது. நடுத்தரக் குடும்பம் ஒன்றின் அல்லல், அவல நிலை, வறுமை, மானம்—இவைகளை வைத்துப் பின்னப்பட்ட சோக பாத்திரமாக இது அமைந்திருக்கிறது. இதில் சிவாஜி, அஞ்சலிதேவி சம்பந்தப்பட்ட காட்சிகளைக்காண, ஒரு கைக்குட்டை போதாது என்று செய்தி எட்டுகிறது. மற்றும் இதில் என். எஸ். கிருஷ்ணனும் மதுரமும் நடித்து வருகிறார்கள். இதை நீலகண்டன் டைரக்ட் செய்து வருகிறார். வசனமும்



இதில்காணும் ஏ. கருணாநிதி, எதார்த்தம் பொன்னுசாமி ஆழ்வார் குப்புசாமி இவர்கள் ஒன்றாகத் தோன்றும் இந்தக்காட்சியைப் பார்த்தால் 'முல்லைவன'த்தில் நகைச்சுவை கட்டங்களுக்கும் குறைவிருக்காதெனத் தெரிகிறதல்லவா?

அவருடையது. இது மதராஸ் பிக்சர்ஸ் உரிமைபெற்ற படமாகும். வெகுவிரைவில் நாள், கணக்கில் வெளிவரப்போகும் படங்களின் பட்டியலில் முதல்இடம் இதற்கு உண்டு.

### உலகம்பலவிதம்

நேஷனல் புரொடக்ஷன்ஸின் இப்பெயர்கொண்ட படம் முடிவடையும் தருணத்தில் இருந்து வருகிறது. மார்ச்சு முதல்வாரம் வெளியாகும். இது ஒரு முழு நீள ஹாஸ்யப் படமாகும். இதற்குரிய கதை, வசனத்தை வி. என். சம்பந்தம் எழுதித் தந்திருக்கிறார். இதில் லலிதா. டி. கே. ராமச்சந்திரன், எம். சரோஜா, லட்சுமிப்ரபா, ராதா கிருஷ்ணன் நடித்துவருகிறார்கள். டிஸ்ஷாவின் தயாரிப்பு இது.

### படித்த முட்டாள்

சென்ற 27–ந் தேதி வாஹினி ஸ்டுடியோவில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தனது சொந்தப் படமான 'படித்த முட்டாளின்' துவக்க விழாவை மிகவும் சிறப்புடன் நடத்தினர். அது சமயம் நாவலர் நெடுஞ்செழியனர் சொற்பொழிவாற்ற, விஜயா புரொடக்ஷன்ஸின அதிபர் பி. நாகிரெட்டி காமிராவை முடுக்கினர்

டி. ஆர். ராமச்சந்திரன், வி. நாகையா. டி. எஸ். பாலையா, லலிதா, மனோகர், கிருஷ்ணன், மதுரம் நடிக்கப்போகும் இப்படத்தை என். எஸ். கேயே டைரக்ட் செய்கிறார். இதன் வசனத்தை கண்ணதாசன் எழுதுகிறார்.

## யார் தெரியுமா?

1. தமிழ் நாட்டிலிருந்து வடநாடு சென்று இந்திப் படத்தில் நடித்த முதல் நடிகர் யார் தெரியுமா?
2. வைஜயந்திமாலாவை 'மேக் அப்' சோதனை செய்து பார்த்துவிட்டு, இவர் சினிமாவில நடிக்க லாயக்கு இல்லை என்று சொன்ன பட முதலாளி யார் தெரியுமா?
3. நமது பிரபல நாட்டிய நடிகையின் தாயாருக்கு, காது 'டமார ச் செவிடு. அவர் யாரென்று தெரியுமா?
4. முன்பு "சதி லீலாவதி" என்ற தமிழ்ப் படத்தில் நடித்த நடிகையான எம். ஆர். ஞானம்பாள் பிரபல நடிகரை மணந்து கொண்டிருக்கிறார், அந்த நடிகர் யார் தெரியுமா?
5. ஒரு ஹாஸ்ய நடிகருக்கு "சனி", "காகா"—என்றெல்லாம் பெயர்களுண்டு. அவர் யார் தெரியுமா?

# ஏன் எடுக்கிருர்கள்?

நடிகர்கள் சொந்தமாகப் படம் எடுக்கிற ஆசை இப்போது தென்னாட்டில் மின்னல் வேகத்தில் பரவி வருகிறது. ஆனல் அந்த ஆசை எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறது, எவ்வளவு பேர் அவ்வாசைக்குப் பலியாகி 'விழிக்கிருர்கள்' என்று பார்த்தால், ஏன் சொந்தப்பட ஆசைக்கு இரையானுேம் என்று ஏங்குபவர்களே அதிகம்.

அப்படி ஒரு பட்டியல் தயாரிப்போமானுல்......

ஸ்ரீ குமார் புரொடக்ஷன்ஸ் உரிமையாளரான டி. ஆர். மகாலிங்கம் இன்று படுகிற அவதிகளுக்கும், விடுகிற பெருமூச்சுகளுக்கும் கணக்குக் கிடையாது. பிறருடைய படங்களில் நடித்து, நடிகராக மட்டும் மகாலிங்கம் இருந்தவரையில் அவருடைய கையிலும், பையிலும் 'லட்சங்கள்' புரண்டன. ஆனல் சொந்தப்படம் என்று அவர் எடுக்க ஆரம்பித்த பிறகு பாவம்! ஒன்றும் உருப்படியாக ஓடவில்லை! படங்களுக்குப் பதிலாக மகாலிங்கம்தான் நாலாபுறமும் ஓடும்படி நேர்ந்து விட்டது! இவ்வளவு அனுபவித்தும்கூட, இருந்தவர்களெல்லாம் வெற்றிலை பாக்கையும், வெள்ளியையும் ஒழித்துக் கட்டியும் டி. ஆர். மகாலிங்கத்துக்கு இன்னும் சொந்தப்படம் எடுக்கிற ஆசை விட்டபாடில்லை! அவரை 'நாகூர் ஆண்டவன்'தான் காப்பாற்ற வேண்டும்!




காதலன் அணைப்பிலே மெய்மறந்து நிற்கிருர் குமாரி ருக்மணி. இம்மாத மத்தியில் வெளிவரவிருக்கும் 'முல்லைவனத்'தில் ஸ்ரீராம்—ருக்மணி தோன்றும் காட்சி இது.

**பா**னுமதி. பரணி பிக்சர்ஸ் ஸ்டுடியோவின் பொறுப்பாளி. அவைகளெல்லாம் உருவாவதற்கு முன்னால் அவருடைய நடிப்பும், பிரபலமும் பாராட்டும்படி இருந்தன. ஆனால் சொந்த ஸ்டுடியோவில் சொந்தப் படம் என்று அவர் பிடிக்க ஆரம்பித்தது முதல் சுகப்படவில்லை! எப்படியாவது ஏமாற்றிப் படத்தை வெளியிட்டால் போதும் என்று திணற வேண்டிய நிலைமைக்கு வந்துவிடுகிறார்! சொந்தப்படமான 'சண்டிராணி' செய்த சண்டித்தனத்திற்குப் பிறகுகூட, அவரது ஆசையும், பிடிவாதமும் குறையவில்லை. தமிழ் 'விப்ரநாராயணா'வாவது அவரது திட்டத்திற்கு 'நாமம்' போடாமல் இருக்கவேண்டும்!

**சொ**ந்தப் படம் எடுத்துத் தன் கையிரண்டும் சுட்டுக்கொண்ட பெருமையில் எம். ஜி. ராமச்சந்திரனுக்கும் பங்கு உண்டு. அவருடைய 'நாம்' என்னவாயிற்று என்று அனைவரும் அறிவார்கள்! அதற்குப்பிறகு இன்னொரு பெயரால் இரண்டாவது படத்தை எடுக்க எண்ணினார்! நல்லவேளையாக இதுவரையில் சும்மா இருந்துவருகிறார்! மீண்டும் சிலர் கூடயிருந்து அவருடைய மௌனத்தைக் கலைக்காமல் இருக்க வேண்டும்! அப்படிக் கலைத்தால் 'இன்பக்கனவை' அவரேகாண ஆரம்பித்து விடக்கூடும்!

(இன்னும் வரும்)



விரைவில் வெளிவரவிருக்கும் எம். ஏ. வி பிக்சர்ஸாரின் 'பெண்ணரசி'யில் கண்ணாம்பாவும், ஈ. வி. சரோஜாவும் தாயும் மகளுமாகத் தோன்றும் காட்சி இது.

# ஒளி மாடம்



"நரா"

## 4

## ராஜம்

"என்ன, இது? இரண்டு மூன்று நாளாய் ஒரே முணுமுணுப்பு. வேலை செய்ய விருப்பமிருந்தால் இங்கே இரு, சம்பளம் அதிகம் வேண்டுமென்றால் வேறு எங்கேயாவது போய்விடு. ஆமாம், இது கண்டிப்பான பேச்சு.

"நான் என்னங்க உங்களை அதிகமாகக் கேட்கிறேன். பத்து வருடமாய் உங்களிடம் வேலை செய்துவருகிறேன். எனக்கு என்னங்க இந்த உலகத்தில் ஆசை. என் ஒரே பிள்ளை, குப்பனை எப்படியோ எட்டாவதுவரை படிக்க வைத்து விட்டேன். அவன் இன்னமும் படிக்கவேண்டுமாம். சின்னம்மா படிக்கிற பள்ளிக்கூடத்தில் படிக்கணும் என்று பிடிவாதம் செய்கிறான். அவன் அப்பன் இருந்தாலாவது எப்படியாவது சம்பாதித்து அவனை ஏதோ கொஞ்சம் படிக்க வைக்க முடியும். போன வருசமே அந்தப் பாழாய்ப்போன காய்ச்சல் அவரை விழுங்கிவிட்டது. அப்புறம் ஏதுங்க எங்களுக்கு வருமானம். ஏதோ நீங்க பெரிய மனசு வைத்தால் என் பிள்ளையைப் படிக்க வைப்பேன்."

"அட பைத்தியக்காரி! படிப்பாம், படிப்பு! படித்துவிட்டு எவன் ஆயிரம் பத்தாயிரம் என்று சம்பாதித்திருக்கிறான். இப்போது எப்படிக் கஷ்டப்படுகிறீர்களோ, அப்படித்தான் அன்றைக்கும்!

மேலும் பாரு, படித்தவர்களுக்கு ஒரு நிலையான புத்தியே கிடையாது. நாளைக்கு உன்னை கைவிட்டாலும் விட்டுவிடுவான், ஆமாம்''

''என் மகன் அப்படிப்பட்டவன் இல்லீங்க. என்னிடம் அவனுக்கு ரொம்ப அன்பு.''

''மீனாட்சி, உனக்கு என்ன சொன்னாலும் புரியாது. காரியம் ஆகிறவரைக்கும் காலைப் பிடிப்பதுதான் வழக்கமாயிற்றே! இன்றைக்கு 'அம்மா, அம்மா' என்று அர்ச்சனை பண்ணுவான் நாளைக்கு 'போயிட்டு வா தாயே' என்று மணி அடித்து விடுவானே! உனக்கேன் இந்த வம்பு—தொல்லை எல்லாம். பேசாமல் அவன் படிப்பை நிறுத்திவிடு. அவனும் இங்கே வேலை செய்யட்டும், நல்லபடியா வாழலாம்.''



''நீங்களே இப்படிச் சொன்னால் இந்த ஏழை என்னங்க செய்ய முடியும்? ஒரு மூன்று ரூபாய் சம்பளம் உயர்த்தக் கூடாதுங்களா ...?''

''மீனாட்சி, மறுபடியும் மறுபடியும் என்னிடம் இதைப்பற்றிப் பேசாதே. சம்பளத்தை இதைவிட உயர்த்த முடியாது. ஆமாம், இது கண்டிப்பான பேச்சு.''

அப்பா இவ்வாறு வேலைக்காரி மீனாட்சியிடம் கண்டிப்புடன் பேசிக்கொண்டிருந்ததை என் அறையிலிருந்தே நான் தெளிவாகக் கேட்டேன். அப்பாவின் போக்கு எனக்குத் துளிகூடப் பிடிக்கவில்லை. ஆனால் அப்பா என்னிடம் எப்போதும் அன்பாகவே நடந்து கொள்கிறார். அந்த அன்பை எனக்காகப் பணம் செலவு செய்வது மூலம் காட்டுகிறார்.

போன வாரங்கூட வேண்டுமென்றே எனக்கொரு பட்டுச் சேலை வாங்கி வந்தார் அப்பா! 50 ரூபாயாம் அதன் விலை! பள்ளியில் படிக்கும் எனக்கு இவ்வளவு விலை கொண்ட சேலை எதற்கு?

'ராஜம் கட்டி இருக்கிறாளே, ஒரு சேலை அது எவ்வளவு அழகாய் இருக்கிறது தெரியுமா? இதுபோல் எனக்கும் வேண்டும், அம்மா. அப்பாவிடம் சொல்லி நாளைக்கு வாங்கிவரச் சொல்ல வேண்டும்' என்று மற்ற பெண்கள் தங்கள் பெற்றோர்களிடம் பிடிவாதம் செய்தால் அதனால் எவ்வளவு தொல்லை விளைகிறது.

'என்னுடன் படிக்கிறாளே சுந்தரி, அவள் எப்போதும் கைத்தறி சேலையே கட்டிவருகிறாள். அவள் அப்பாவும் அதையே வாங்கித் தருகிறார். சேலையும் அழகாய் இருக்கிறது, செலவும் மிகக் குறைவு! நானும் கட்டவேண்டுமென்று ஆசைப்பட்டு ஒரு சேலை வாங்கினேன்.

அதை அன்று கட்டிக்கொண்டு பள்ளிக்குப் புறப்படும்போது அப்பாவின் கண்ணில் பட்டுவிட்டேன்.

"ராஜம், இது என்ன சேலை?"

"கைத்தறி சேலை'யப்பா! சுந்தரிகூட இதுமாதிரி ஒன்று வைத்திருக்கிறாள்."

"அவள் வைத்திருப்பாள். இனியும் வாங்குவாள், அதைப பற்றி என்ன கவலை? ரோட்டில் பிச்சைக்காரன் கிழிந்த வேட்டி கட்டியிருந்தால் நாமும் கட்டிக்கொள்ள முடியுமா? உனக்கு இந்த சேலை தகுதியில்லை! இதைத் தூக்கி வேலைக்காரியிடம் கொடுத்துவிடு. இதைப் போய் வாங்கினாயே" என்று வெறுப்போடு என்னைப் பார்த்துக் கூறினார். பிறகு என்ன செய்ய முடியும்? படுக்கைச் சேலையாகத்தான் அது பயன்பட முடிந்தது.



அப்பா ஆடம்பரத்தை விரும்புகிறார். அப்படி இருந்தால்தான் மதிப்பாம்! மதிப்பாய் நடந்து புகழ் தேட வேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமைதான், ஆனால் ஆடம்பரத்தால்மதிப்பைத் தேடுவதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. அறிவினால் மதிப்பு அடையக் கூடாதா? அன்பினால் மதிப்பை அடையக் கூடாதா? காகிதப் பூவை எத்தனையோ பெண்கள் விரும்பி வாங்கிச் சூட்டிக்கொள்கிறார்கள். அதனால பயன என்ன? பார்ப்பதற்கு அழகுதான்! மணமிக்க முல்லைக்கும் மல்லிகைக்கும் இருக்கும் மதிப்பு இதற்கு வந்துவிடுமா? மதிப்பென்று அவள் நினைத்தால், மற்ற பைத்தியக்காரிகள் அவளுடைய சேடிகள்தான். அப்படித்தான் இந்த ஆடம்பரமும்! இதனால் 'மதிப்பு' என்று நினைப்பவர்களை என்னவென்று அழைப்பது?

ஆடம்பர எண்ணம் யார் உள்ளத்தில் தலை நீட்டுகிறதோ, அவர்களிடத்தில் இரக்கம்—பெரும் அன்புணர்ச்சி இவைகள் அமையாது என்றுதான சொல்லவேண்டியிருக்கிறது. பாவம்! வேலைக்காரி மீனாட்சி மூன்று ரூபாய் சம்பளம் உயர்த்தச் சொன்னது, குடிசை வீட்டை ஓட்டு வீடாக மாற்றவா? தன பிள்ளையாவது படித்து முன்



னேற வேண்டும் என்ற கட்டுக் கடங்காத ஆசையினுல் அல்லவா வப்படிக கேட்டாள்.

இப்படி முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக பழங்கால ஆட்கள் இருக்கிருர்கள். இவர்களுக்குப் பிறகு முன்னேறலாமல்லவா! ஆனுல் ஒன்றுண்டு. இப்போதிருக்கும் இளைஞர்களும் பெண்களும், அந்தப் பழங்கால ஆசாமிகளின் போக்கில் போகக் கூடாது. அவர்கள் காரணமின்றி நம்பும் பழக்க வழக்கங்களையும் கடைப்பிடிக்கக் கூடாது.

இந்தப் பழங்கால ஆசாமிகளின் போக்கே ஒரு விசித்திரமானது! எதையும் எளிதில் நம்பும் பரிதாபத்துக்குரியவர்கள்.

கள்ளிச் செடிகளை வெட்டி, தரையிலே பரப்பி, அதன்மேல் ஒரு அழகான நேர்த்தியான போர்வையை விரித்து, "இதன்மீதுதான் நீங்கள் நடக்க வேண்டும்" என்று யாரோ சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள். எதையும் நம்பும் இதயம் படைத்தவர்கள் அதில் நடந்தார்கள். கள்ளி முட்கள் குத்தின கால்களில்! 'தெய்வீகம்' என்று அதை நம்பினுர்கள். ஆனுல் இக்கால இளைஞர்கள் அந்தப் போர்வையைச் சற்று விலக்கிப் பார்த்துவிட்டால் போதும், உள்ளே இருப்பது தெய்வீகமா? அன்றிக் கள்ளிச் செடிகளா? என்பது வெட்ட வெளிச்சமாகிவிடும்.


சற்று நேரத்திற்குப் பிறகு எதையும் சிந்திக்க இயலாது, வேலைக்காரியைப்பற்றி நினைததேன். அவளுக்கு எப்படியாவது மூன்று ரூபாய் சம்பளம் அதிகமாக்க வேண்டும் என்று என்மனம் தூண்டியது. அப்பா இருக்கிறாரா அல்லது வெளியே போய்விட்டாரா என்று பார்த்துவிட்டு, வெளியே சென்றுவிட்டார் என்று தெரிந்ததும் ''மீனாட்சி'' என்று வேலைக்காரியைக் கூப்பிட்டேன்.

''மீனாட்சி, நீ எதற்கும் கவலைப்படாதே. அப்பாவிடம் நான் சொல்லி ஏற்பாடு செய்கிறேன். 'இல்லை முடியாது' என்றால் நானே உனக்கு அந்தச் சம்பளத்தை தருகிறேன். கவலைப்பட்டுக் கொண்டிருக்காதே'' என்று அன்போடு சொன்னேன். என் வார்த்தைகளைக் கேட்டவுடன் அவள் பூரித்துப் போய்விட்டாள்.

''ராஜம், உன் மனசு தங்கம்! உனக்கு ஏற்ற ஒரு கணவன் கிடைக்கணும், அதுதாம்மா என் ஆசை!'' என்று வாழ்த்திவிட்டே போய்விட்டாள்.

'உனக்கு ஏற்ற கணவனை நீ தெரிந்து எடுத்துக்கொள்ள வேண்டும், அதுதான என் ஆசை' என்று மீனாட்சி சொல்லி இருக்கக் கூடாதா? 'கிடைக்கணும்' என்றுதானே சொன்னாள். கிடைக்காவிட்டால் வாழ்க்கையே பாழாய்ப் போய் விடுமே. அதை அவர்கள் மிக எளிதாகச் சொல்லி விடுகிறார்கள், ''அது அவள் விதி'' என்று! நம்முடைய முட்டாள் தனத்தால்விளைநத கேடு என்பதை உணர மாட்டார்கள்.

''ராஜம், ராஜம் — காபி குடிக்க இன்னும் நேரமாக வில்லையா? வாம்மா, சீக்கிரம்'' என்று அம்மா அழைத்தவுடன் கெடிகாரத்தைப் பார்த்தேன். ஐந்தை



எட்டிப் பிடிக்க அது 'டிக் டிக்' என்ற ஓசையோடு போராடிக் கொண்டிருந்தது.

காப்பியை ஆற்றிக் குடித்துக் கொண்டிருக்கும்போதே அப்பாவும் வந்துவிட்டார். உள்ளே நுழைந்து என்னைப் பார்த்ததும் புன் சிரிப் போடு, "என்ன ராஜம், காப்பி குடிக்கிறயா ?" என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தார்.

"ஆமாம்'பா. நீங்கள் சாப்பிடுங்களேன்" என்று ஆற்றிய காப்பி டம்ளரை அப்பாவிடம் நீட்டினேன்.

"நீ முதலில் குடி'யம்மா. அது சரி, இன்றைக்கு எல்லோரும் சினிமாவுக்குப் போகவேண்டும். தயாராய் இருங்கள்" என்று அப்பா திடீரென்று எங்களுக்குக் கட்டளையிட்டார். சற்று நேரத்திற்குப் பிறகு நான், அப்பா, அம்மா மூவரும சினிமாவுக்குக் கிளம்பினோம் "காரை மெதுவாக ஓட்டு, டிரைவர்" என்று அப்பா டிரைவரிடம் சொன்னார். எனக்கும் அது நல்லது என்றே பட்டது.

ஆறுமணி சுமாருக்கு நாங்கள் தியேட்டரை வந்தடைந்தோம். அப்பா மூன்று முதல் வகுப்பு 'டிக்கட்டு' வாங்கி வரச்சொன்னார். தியேட்டருக்குள் நுழைந்து நாங்கள் உட்கார்வதற்கும் படம் ஆரம்ப மாவதற்கும் சரியாக இருந்தது. அன்று அவ்வளவு கூட்டமாக இல்லை. அதனால சத்தம் அதிகமில்லாமல் சற்று அமைதியாகவே இருந்தது. எப்படியோ ஒன்றரை மணிநேரம் கழிந்துவிட்டது. இடை வேளையில் சற்று வெளியே வந்து நிற்கலாம் என்று எண்ணிக்கொணடு வெளியே வந்தேன். அப்படி வெளியே வந்தது மிகவும் நல்லகாலம்தான். எதிர்பாராத விதமாக செல்வத்தை அங்கு கண்டேன். என்னையும் அவன் பார்த்தான். எனனுடன் படிககும் மாணவர்கள் அததனை பேரும் 'சிகரெட்' பிடிப்பதை நான் எத்தனையோ இடத்தில் பாாததி ருக்கிறேன். ஆனல் செல்வத்திடம் அந்தக் கெடட பழக்கம் இல்லை. வகுப்பில்கூட அவன் மற்ற பையன்களைப்போல அரட்டை அடிக்க மாட்டான். பேசாமல் எதையாவது படிப்பான், இல்லையென்றல் எழுதிக்கொண்டிருப்பான். இப்படி அவனைப்பற்றி பெருமையாக எண்ணிக் கொண்டிருக்கும்போதே, "வணக்கம் ராஜம்" என்று அன்போடு என்னைப் பார்த்து மரியாதை செலுத்தினன். பதிலுக்கு நானும் வணக்கம் செய்தேன்.

"என்ன ராஜம், தனியாகவா வந்தாய் ?"

"இல்லை, குடும்பத்தோடுதான்.......!" என்று நான் சொன்ன வுடன் செல்வம் சிரித்துவிட்டான். நானும் அவனேடு சேர்ந்து கொண்டேன்.

"ரராஜம்.........."

"என்ன செல்வம், ஏன் தயக்கம், சொல்லு.... ...."

"அன்று தெரியாமல்—எதிர்பாராமல்—உன்னோடு வந்து மோதிவிட்டேன். அதை மறந்துவிடு ராஜம். என்னையும் மன்னித்துவிடு."

"நானுந்தான் தெரியாமல்—எதிர்பாராமல் உன்னோடு வந்து மோதிவிட்டேன், நீதான் என்னை மன்னிக்க வேண்டும்."

"ராஜம் நீயா இப்படிப் பேசுகிறாய். உனக்கு எத்துணை அன்பு மனம்!" என்று ஆச்சரியத்தோடு செல்வம் கேட்டான்.

"அது இருக்கட்டும் செல்வம், நேரமாகிறது. அம்மாவும் அப்பாவும் என்னைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். மீதியை நாளை பேசுவோம். உம்........செல்வம்! உன்னை நாளைக்கு எங்கே சந்திப்பது?"

"இராஜேந்திரன் கலைக் கண்காட்சியில் சங்கீத மண்டபத்தில்!" என்றான் செல்வம், பிறகு விடைபெற்றுக்கொண்டு உள்ளே சென்றுவிட்டேன். அந்த 'இடைவேளை' எனக்கு எவ்வளவு பெரிய தொண்டு செய்தது! அதை வாழ்த்திக் கொண்டே அம்மாவுக்குப் பக்கத்தில் அமர்ந்தேன்.

என் கண்கள் திரையைப் பார்த்துக் கொண்டு இருந்ததே தவிர, திரையில் வருவது யார், பேசுவது யார் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. திரையில் நான் கண்டது செல்வத்தைத் தான். அவன் என்னிடம் மன்னிப்புக் கேட்டது, பிறகு நான் அவனிடம் மன்னிப்புக் கேட்டது எல்லாவற்றையும் எண்ணி மகிழ்ந்தேன். மறுபடியும் மறுபடியும் இந்தப் பாழுங் கண்கள் அந்த செல்வத்தையே தேடித் தேடி அலைந்தன!

## எழுத்தாளர்களுக்கு

பொன்னி இதழுக்குக் கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றையனுப்புவோர் கீழ்க்காணும் குறிப்புகளைக் கவனித்தருள வேண்டுகின்றோம்!

★ பிறமொழிக் கலப்பின்றி, நல்ல இனிய எளிய தமிழில் எழுதியிருக்கின்றீர்களா?

★ பகுத்தறி வுணர்ச்சியைச் சிறிதேனும் ஊட்டத் தககதா யமைந்துள்ளதா?

★ தமிழ், தமிழர் தமிழ்நாட்டுப்பற்றை மக்களிடை உண்டாக்குமா?

★ பண்டைத்தமிழ் இலக்கியக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துணர்த்துமா?

★ ஆராய்ச்சியுரைகள் உளவா? புதிய கண்டுபிடிப்புகளா? புதுமைகளா?

—ஆசிரியர்.

அச்சுத் தொழில் வளருகிறது. எதையும் அச்சிலேற்றி
அழகு காணும் நாள் இது. எனவே அச்சகங்களிலே
வேலைகளை முடித்துக் கொடுப்பதில் நெருக்கடி
ஏற்படுகிறது. என்றாலும் வாடிக்கைக்காரர்
களுக்குக் குறித்த தவணையில் கலைப்
பண்பு, புதுமை, உயர்வு திகழ
அவற்றைத் திட்டமிட்டு முடிக்
கும் பொறுப்பை ஏற்றுக்
கொள்ள நாங்கள்
காத்திருக்கிறோம்!

★

# பொன்னி அச்சகம்

127, பிராட்வே :: சென்னை–1.

[ கதையமைப்பையோ, கற்பனைக் கருத்துக்களையோ, சொற்றொடர்களையோ எடுத்தாள எண்ணுவோர் ஆசிரியர் தம்இசைவுபெறல்வேண்டும் ]



# அந்த நாள்

"சிலம்பின்செல்வன்"

மாடலன் : கவலையின்றி வாழ்பவன் இந்த மாடலன் அல்ல! உச்சிக்குடுமி ஆடினால் இந்த உலகமே ஆடும் என்பதை சேரனும் செங்குட்டுவன் உணர வேண்டும்! இல்லை. இல்லை. வீரனும் அந்த வில்லவன் கோதையை உணரச் செய்ய வேண்டும். இந்து நெறியை இழிநெறியெனக் கருதிச் சொந்தநெறி தோற்றுவித்த அந்த இளங்கோவும் அதனை உணர வேண்டும் — என்பதற்காக— வஞ்சிமா நகரிலே — வடபுலத்தமைந்த கங்கைக்கரையிலே — சேர நாட்டுக் காவலன் வாழ்விட மெங்கோ அங்கெல்லாம் — சென்றேன் ... ஆரியர் தம் வாழ்விற்காக அல்லும் பகலும் உழைத்தேன் — அயரா து அலைந்தேன்.

பைரவன் : அலைந்ததன் பயன் தான் ஆரியர் தம் அரிய பண்பாடுகள் அழிக்கப்பட்டன. கல் சுமந்தன அவர் தம் முடித்தலை .... கைவிலங்கேற்றன அவர் தம் கரங்கள்!

மாடலன் : இல்லை. இல்லை. அறியாது கூறுகின்றீர்! அரச அவைக்கு வந்து பாரும் மாடலன் செய்த சதிக்கு அவன் மதி எத்தனை காலம உழைத்திருக்கும் என்பதை .... கல் சுமத்திய அந்த வில்லவன் கோதையின் வெற்றிக் கரங்களை, கனகவிசயர் தம் காலடி பணியச் செய்கின்றேன்—அறக்கள வேள்வி செய்தல் மறத்தமிழர் பண்பாட்டை மாசுபடுத்தும் என்று கூறிய இளங்கோவுக்கு முன்னே! ஆரியர்தம் அரக்கள வேள்வியை அந்தச் செங்குட்டுவனைக் கொண்டே செய்து காட்டுகின்றேன் .... இன்றேல் ... அன்று கூறியதைத் தான் இன்றும் கூறுகின்றேன். நான் அணிந்திருப்பது முப்புரி நூலல்ல; முழூப்பஞ்சைக் கயிறு என்று உலகம் கூறட்டும். கையில் பிடித்திருப்பது கமண்டலமல்ல; அன்னக்காவடி என்று கூறட்டும். நெற்றியிலே இட்டிருப்பது திருநீற்றுப் பூச்சல்ல; தெருப்புழுதிப் பூச்சென்று கூறட்டும். வாகை சூடிய கூட்டத்தை நம் வலம் வரச்செய்கின்றேன்.

ஆசான் : வெற்றி நம் பக்கமாக நானும் வேண்டியதைச் செய்கின்றேன்.

பைரவன்: மாடலன் மனம் வைத்தால் இந்த மண்டலமே ஆட்டங் கண்டுவிடுமே. கோளரி வாழும் கோட்டையாயினும் குள்ளநரி புகுந்தால்..........

ஆசான்: கோட்டை மட்டுமென்ன, இந்தக் குவலயமே அழிக்கப்படுமே.

மாடலன்: செல்கின்றேன். செங்குட்டுவன் அவைக்கு....சேர நாட்டு வேந்தே!

## காட்சி 34.

[இடம்: செங்குட்டுவன் அவை. வில்லவன் கோதை அமைச்சர் முதலியோர் வீற்றிருக்கின்றனர்]

சாக்கையன்: வாழ்க நும் புகழ்! வளர்க நும் ஆட்சி! (கொட்டிச் சேதம் என்னும் கூத்தை கூத்தச் சாக்கையன் ஆடுகின்றான்)

செங்குட்டுவன்: கூத்தச் சாக்கையா! நன்று நின் ஆடல். உமையவள் ஒரு திறமாக இமையவன் ஆடிய கொட்டிச் சேதத்தை அமைவுடன் ஆடினாய். நன்று நன்று நின் ஆடல். மகிழ்ந்தோம் நின் கூத்தைக் கண்டு.

சாக்கையன்: வணங்குகின்றேன் மன்ன வாழ்க நின் புகழ்! (சாக்கையன் மறைகின்றான்)

மகிழ்வூட்டி: ஆ....ஆ...என்ன ஆட்டம் என்ன கூத்து. சேவடியிலே சிலம்பு கிடந்து புலம்ப; செங்கையிலே பறைகிடந்து முழங்க; செங்கண் ஆயிரம் திருக்குறிப்பினைச்சிந்த செஞ்சடை திசைதொறும் சென்றலைய; பாடகம் பதையாமல், சூடகம் துளங்காமல், மேகலை ஒலியாமல் மென்முலை அசையாமல்; வார்குழை ஆடாமல் மணிகூந்தல் அவிழாமல் ஆடும் ஆட்டத்தைக் கண்டால் யாருக்குத் தான் மகிழ்ச்சி உண்டாகாது. அடா! அடா, அடா, என்ன ஆட்டம்! என்ன கூத்து.

செங்குட்டுவன்; வில்லவன் கோதை.

வில்லவன்: வேந்தே!

செங்குட்டுவன்: நீலன் முதலிய கஞ்சுகமாக்கள் வந்தனரா?

வில்லவன்: ஆம் வேந்தே! மாடலனும் உடன் வந்திருக்கின்றார்.

செங்குட்டுவன்: நன்று. மாடலனும் நீலனும் இங்கு தோன்றட்டும்.

[மாடலனும் நீலனும் அவையில் புகுதல்]

மாடலன்: நான்மறைப் பார்ப்பான் தன்னெறி போற்றும் நல் வேந்தே வாழ்க.

நீலன்: வடவர் முடித்தலை வணக்கிய கொற்றவ வணக்கம்.

செங்குட்டுவன்: (கையமர்த்தி) நீல! செம்பியன்மூதூர் சென்றனையோ?

நீலன்: ஆம் வேந்தே! ஆம்! செம்பியன் மூதூருக்குச் சென்றேன். செம்பியனைக் கண்டு வணங்கினேன். வாழ்த்தினேன். கனகவிசயரைக் காட்டினேன். கன்னித் தமிழ்ச்சேரன் கனகவிசயர்

தலையில் கல்லேற்றிய கதையை விரித்துரைத்தேன். அதற்கு அந்தச் செம்பியன்.

செங்குட்டுவன்: என்ன சொன்னான்.

நீலன்: வேந்தே...செம்பியன் அவையில் சென்று புகுந்தோம்!

(திருப்புக் காட்சி)

## காட்சி 35.

[சோழ மன்னன் அவை. நீலன் நிற்கின்றான் கனக விசயருடன்]

செம்பியன்: யார் நீங்கள்....?

நீலன்: அன்று இலங்கையிலே வெற்றி ஏற்றான்–இமயத்திலே கொடி நாட்டினான்—எங்கோ மகளைக் கங்கை நீராட்டி வந்தெதிர்த்த கயவரை வென்று வாகை சூடினான் — சிங்களவரை வென்றான் — செயக்கொடி நாட்டினான் — செந்தமிழை யாண்டும் பரப்பினான் — கடலிலே கலம் செலுத்திக் கடம்பர் தமைக் கட்டிக்கொணர்ந்தான் – கொங்கர் செங்களத்தே மங்காத புகழைப் பொறித்தான் - இன்றோ! கங்கைக் கரையிலே கன்னித் தமிழரை இகழ்ந்துரைத்த கனகவிசயர் தலையிலே கல் சுமத்தி—இதோ இங்குகொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றான்! இமயவரம்பன் மகன். இங்கே நிற்கும் இவர்கள் தான் வீரத்தமிழரை இகழ்ந்த சூரப்புலிகளாம் ஆரியர்கள்!

செம்பியன்: (சிரித்தல்) கொல்லாக் கோலத்திலே......உயிர் காக்க ஓடியவரை வெல்போரில் கோடல்தான் வெற்றியோ! கொற்றவன் ஆனாலென்ன? கோவேந்தன் ஆனால் என்ன? மற்றவர் கேட்டு நகைக்க எமக்கு வெற்றிப் பாடம் கற்பிக்கின்றாயே. (சிரித்தல்) வெற்றியாம் வெற்றி.

நீலன்: வேந்தே! விற்கொடியை இகழாதீர். வெஞ்சமரிலே அஞ்சாது நின்று வெற்றிக்கொடி நாட்டிய வீரனை இகழாதீர்! ஒன்பது மன்னரை ஒரு பகலில் விரட்டிச் சிம்மாசனத்திலே உம்மை அமர்த்திய சேரனை இகழாதீர்.

செம்பியன்: சேரன் ஆனாலென்ன செந்தமிழ்ப்பாண்டி வேந்தன் ஆனாலென்ன? வெற்றியாம் வெற்றி. எது வெற்றி வெஞ்சமருக்கு அஞ்சிப் பஞ்சைகளாய் வஞ்சி சூடாது வாகை ஏற்காது அஞ்சியொதுங்கிக் கெஞ்சிக் கூத்தாடிச் சென்ற ஆரியரைக் கட்டி இழுத்து வருவதுதான் வஞ்சிநாட்டான் வெற்றியோ?

வாளும் குடையும் மறக்களத்தே விட்டுச் சென்றாரை வேலும் வில்லும் காட்டி இழுத்து வருதல்தான் உமது வேந்தன் வீரமோ? ... (சிரித்தல்)

## காட்சி 36.

[சேரன் அவை. சேரன் செங்குட்டுவன் நீலன் முதலியோர்]

நீலன்: வேந்தே! கொல்லாக் கோலத்து உயிர்பிழைத்தோரைக் கல் சுமத்திக் கட்டி இழுத்து வருதல் வெற்றியன்று. வீரர்க்குரிய செயலும் அன்று. என்று இகழ்ந்துரையாடினான் செம்பியன் அங்கிருந்து சென்றேன்! முத்தமிழ்ப் பாண்டியன் — எத்திக்கும்

போற்றும் தமது வெற்றியைப் புகழ்வான் என்று—அவன் முன்னே சென்றேன். வெந்த புண்ணிலே அவன் வேல் பாய்ச்சினான்.

செங்குட்டுவன்: என்ன சொன்னான்? இகழ்ந்துரையாடினானா? ஏசினானா? பேசினானா? என்ன சொன்னான்? வடவேந்தர் இகழ்ந்த போது வாய்மூடிக்கிடந்த வாள்வேந்தர்—வாகை சூடி வஞ்சகரை இழுத்து வந்தபோது வெற்றியிலே குற்றம் கூறினராம்! குறை பேசினராம்! வீரனே பாண்டியன் பகர்ந்ததென்ன? புன்மொழி பேசி மனத்தைப் புண்ணாக்கினானா!

நீலன்: பாராள் வேந்தே! பாண்டியன் அவையில் புகுந்தேன். பார் போற்றும் நமது வெற்றியைப் பகர்ந்தேன்! காவாநாவினர் வாழ்க்கை காதையாகப் போவதைக் கழறினேன். அதற்கு அந்தப் பாண்டியன்......

## காட்சி 37.

[பாண்டியன் அவை. அமைச்சர் படைத்தலைவர் முதலியோர் வீற்றிருக்கின்றனர்]

பாண்டியன்: (சிரிப்புக்குப் பின்) புறங்காட்டி ஓடியவனைத் தமிழன் போரிட்டு வென்றதில்லை. படை இழந்து நின்றான் மீது தமிழன் படைகளை ஏவியதில்லை. நேருக்கு நேர் நின்று வீரப்போர் புரிந்திருக்கின்றான். ஆனால் அவன் மார்பைக் காட்டியவரன்றி மற்றவர்களை எதிர்த்ததில்லை. பாருக்குள்ளே அவன் பல போர் முனைகளைச் சந்தித்திருக்கின்றான்; ஆனால் அவன் பயந்தோடியவர்களை விரைந்தோடிப் பிடித்ததில்லை....கலம் செலுத்தியும் கடல்கடந்தும் கன்னிப் போர் பல புரிந்திருக்கின்றான்: ஆனால் அவன் கதி கலங்கி நின்றவரைப் பிடித்துக் கட்டிவந்ததில்லை; பயந்தோடிய பகைவரைப் பாய்ந்தோடிப் பிடித்து வந்த இந்தச் செயல் மாறு வேடம் பூண்டு மறைந்தொளிந்த மாற்றாரைக் கட்டிப் பிடித்து இங்கு வந்து காட்டி நிற்கும் இச்செய்கை—செந்தமிழ் நாட்டார் ஏட்டிலே இதுவரை தீட்டப்படாத செய்தி இனித் தீட்டப்பட வேண்டிய செய்தி தான். (சிரித்தல்)

நீலன்: செந்தமிழ்ப் பாண்டி வேந்தே! சிரிக்காதீர். சிரித்துச் சிரித்து சேரனை இகழாதீர். சிரித்தவர்கள் சீர்பெற்றதில்லை......... சீரழிந்திருக்கிறார்கள். நையாண்டி புரிந்தவர்கள் நல்வாழ்வு பெற்றதில்லை. ஆனால் நாட்டை இழந்து ஓட்டாண்டியாகி இருக்கிறார்கள். கண்முன்னே காணுகின்றீர். கனகவிசயர் கதி என்னவாயிற்றென்பதை.

பாண்டியன்: நிறுத்து உன்து நெடுமொழியை உமையொரு பாகத்து ஒருவனை வணங்கி ஓடியவர்களை — அமர்களத்தை அரசனது ஆக்கி, அஞ்சி ஒழிந்தவர்களை — தவப் பெருங்கோலத்தால் தன்மானம் இழந்து தலைமறைந்தவர்களைப் பிடித்துக் கொணர்தல் பெருவெற்றியோ! (ஏளனச் சிரிப்பு) வெற்றிப் பாடம் கூறுகின்றான் வீணன்.

(தொடரும்)

# பனி மலர்



—வீர. பழனியப்பன்

யாரோ தன் தோள் பட்டையைத்தொடுவது போன்ற உணர்ச்சி. 'சட்'டென்று விஜயரங்கன் திரும்பிப் பார்த்தான், ஒட்டிய கன்னங்கள், ஒளியிழந்த கண்கள், சோர்வு கப்பிய முகம், பரட்டைத் தலை ஆகிய அலங்கோலங்களோடு ஒரு நெட்டையான மனிதன் நின்றுகொண்டிருந்தான். விஜயரங்கனுக்கு அந்த மனிதனை யாரென்று தெரியவில்லை.

"என்னைத் தெரியவில்லையா விஜயம்?" என்று அந்த மனிதன் மிகவும் உரிமையோடு கேட்டான். அந்தக் குரல் விஜயரங்கனை ஒரு உலுக்கு உலுக்கியது.

"நீ....நீ......" எதையோ நினைவுபடுத்த முயன்று, முடியாமல் தத்தளித்தது அவனது உதடுகள்,

"நான்...தினகரன்...." அந்த ஆள் சிரித்தான்.

"ஆமாம், ஆமாம்......நீ இங்கேயா இருக்கே தினகரா?"—விஜயரங்கனின் முகத்திலே ஆனந்தம் தளும்பியது.

"ஆமாம் விஜயம். நாலு வருஷமா நான் இங்கேதான் இருக்கேன்! அது சரி.........நீ இங்கே எங்கே வந்தே? உனக்கும் கிராம வாழ்க்கைக்கும்தான் ஏழாம் பொருத்தமாச்சே!"

"அதையேன் கேட்கிறே தினகரா? இந்த ஊரிலேதான் என்னுடைய பெரியம்மா பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்து இருக்கு...அந்தப் பெண்ணு என்னை இரண்டு வருஷமா இந்த ஊருக்கு ஒருதரம் வந்துட்டுப் போகணும்னு உயிரை வாங்கிகிட்டு இருந்திச்சு. நானும் இதுவரையிலே 'வர்ரேன் வர்ரேன்'னு ஏமாற்றிக் கொண்டே இருந்தேன். ஆனால் இந்தத் தடவை என்னுடைய 'பாச்சா' ஒண்ணும் பலிக்கவில்லை. கையோடேயே அழைத்துக்கொண்டு வந்துட்டுது. என்ன செய்யறது? எல்லாம் என்னுடைய தலைவிதி!"

"சரி, அதெல்லாம் இருக்கட்டும்....வீட்டுக்கு வா போவோம்" என்று தினகரன் விஜயரங்கத்தை இழுத்தான். விஜயரங்கன் சிரித்துக்கொண்டே தினகரன் பின்னால் நடந்தான்.

"விஜயம் நீ இப்போ என்ன செய்துகொண்டிருக்கே?"

"நானா, இப்போ M.B.B.S. படித்துக் கொண்டு இருக்கேன்!"

சரி...உனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லையே?"

"இன்னும் எனக்குக் கல்யாணம் ஆகவில்லை. உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா என்ன?"

"இஹ்ஹிஹ்ஹும்...." தினகரன் அலட்சியமாகச் சிரித்தான். விஜயத்தின் கேள்விக்கு அவன் வேறு பதில் ஒன்றும் சொல்லவில்லை.

அதற்குள் அவன் வீடும் வந்து விட்டது. தினகரன் அந்த வீட்டுக் கதவில் பூட்டப்பட்டிருந்த பூட்டைத் திறந்தான். இருவரும் உள்ளே நுழைந்தனர். விஜயரங்கன் அந்த வீட்டை ஒருமுறை சுற்றிப் பார்த்தான். மூலைக்கு மூலை ஒட்டடைத்தோரணங்களும், சுவரெல்லாம் சுண்ணும்புக் காரை பெயர்ந்து செங்கற்களெல்லாம் பல்லை யிளித்துக் கொண்டு நிற்கும் அலங்காரமுமாக அவன் கண்களுக்குக் காட்சியளித்தன.

தினகரன், விஜயரங்கனை இரண்டாங் கட்டிற்கு அழைத்துச் சென்று அங்கிருந்த ஒரு நாற்காலியில் அவனை உட்காரச் செய்தான். விஜயரங்கன் உட்கார்ந்து இருந்த பக்கத்துக்கு எதிர்ப்பக்க சுவரில் ஒரு திரைச் சேலை தொங்கவிடப்பட்டிருந்தது அந்தத் திரைச் சேலையிலே ஒரு அழகிய பங்களா, பாதி வரையப்பட்ட நிலையில் விடப்பட்டிருந்தது. கீழே கண்ணுடிப் பாத்திரங்களிலே வர்ணங்கள் குழைக்கப்பட்டு இருந்தன. மூலைக்கொன்ருக தூரிகைகள் தாறுமாருகக் கிடந்தன.

விஜயரங்கன் அந்தச் சித்திரத்தை உற்றுப் பார்த்தான். அவன் பார்வையிலே ஒரு பெருமிதம் தாண்டவமாடியது.

''தினகரா, யாருக்காக அந்த 'சீன்' வரையறே?'' என்று ஆவலோடு கேட்டான்.

''ஒரு நாடகக் கம்பெனிக்காரன் வந்து இதுபோல ஒரு 'சீன்' வரைந்து தான்னு கேட்டான். அதுக்காகத்தான் வரையறேன். இம்...என்ன செய்கிறது? வயிற்றுப்பாட்டைக் கவனிக்க வேண்டி யிருக்கல்லவா!'' என்று ஒரு 'அசட்டுச்' சிரிப்புச் சிரித்தான்.

'வயிற்றுப்பாட்டைக் கவனிக்க வேண்டி யிருக்கல்லவா!' இந்த வார்த்தைகள் விஜயரங்கனின் சிந்தனையை ஒரு 'உலுக்கு' உலுக்கியது.

''என்ன தினகரா, நீயா இப்படிப் பேசறே!'' —ஆச்சரியத்தோடு அவனைக் கேட்டான்.

''என், உனக்கு ஆச்சரியமாயிருக்கா விஜயம்? இம்ம்...... வேறே எதுக்காக இந்தத் திரையை வரைந்து கொண்டு பொழுதைப் போக்கவேணும்? எல்லாம் வயிற்றுப்பாட்டுக்குத் தான்....''

மீண்டும் ஒரு சிரிப்பு. ஆனல், அந்தச் சிரிப்பு பைத்தியக்காரத் தனம்போல் விஜயனுக்குப் பட்டது.

''என்னப்பா தினகரா, முந்தியெல்லாம் இதுபோல வரையிறதைக் 'கலை'ன்னு சொல்லிக் கொண்டு என் உயிரை வாங்குவே! இப்போ என்னென்ன 'வயிற்றுப்பாட்டுக்கு'ன்னு ரொம்ப சுலபமா சொல்லுறியே!''

''இஹ்ஹிஹ்ஹும்....'' மீண்டும் ஒரு சிரிப்பு. அதற்கு மேலே தினகரன் ஒன்றும் பேசவில்லை. தூரிகையை எடுத்துக் கொண்டு விடுபட்டிருந்த வேலையைத் தொடங்கினன்.

தினகரனின் பேச்சு, இந்தப் பைத்தியக்காரச் சிரிப்பு, இவைகள் எல்லாம் விஜயரங்கனின் மூளையில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியது. அவன் ஊமைபோல தினகரனை உற்று நோக்கிக்கொண்டிருந்தான்.

''எல்லாம் வயிற்றுப்பாட்டுக் குத்தான்....இஹ்ஹிஹ்ஹூம்....''

விஜயரங்கன் மனதில் ஒரு குடைச்சல்.

அப்பொழுது தினகரன் கையிலிருந்த தூரிகையினுல், சித்திரத்திற்கு 'புகைப்புலன்' உண்டாக்கிக் கொண்டிருந்தான். மங்கலாக அதுவரையில் தெரிந்து கொண்டிருந்த அவ் வோவியம் தெளிவாகத் தென்பட ஆரம்பித்தது.

விஜயரங்கன் உள்ளத்திலே கூட அதுபோல ஒரு நிகழ்ச்சி.... முதலில் மங்கலாக....பிறகு.......

சுழன்று சுழன்று ஓடிவந்து கரையோடு 'கிளியந்தட்டு' ஆடிக்கொண்டு 'ஓங்கார'க் குரல் இட்டுக்கொண்டிருந்தன கடல் அலைகள்.

விஜயரங்கனும், தினகரனும் அதே கடற்கரை மணல்வெளியில் தான் உட்கார்ந்து இருந்தனர். ஆனுல் அவர்கள் அந்தக் கடல் அலைகளின் ஆரவாரத்தைக் கவனிக்கவில்லை. அவர்களுடைய சிந்தனைகள் எல்லாம் அவர்கள் இருவருக்குள்ளும் தோன்றியிருக்கும் 'சர்ச்சை'யில் எப்படி மற்றவனை மடக்கி தன் வழிக்கு இழுப்பது என்பதேயாகும்!

விஷயம் ஒன்றும் அவ்வளவு பிரமாதமானது அல்ல! 'கலை'யென்பது வயிற்றுப்பாட்டுக்குச் செய்யக்கூடிய ஒன்று. அதை எல்லோரும் செய்யலாம்; எப்பொழுதும் செய்யலாம்' என்பது விஜயரங்கனின் கட்சி. ஆனுல் தினகரனே 'வயிற்றுப் பாட்டிற்கு செய்யக்கூடியதற்குப் பெயர் கலையல்ல, தொழில். கலையை எல்லோரும் எப்பொழுதும் செய்துவிட முடியாது. அதற்கென ஒரு சூழ்நிலை அமைந்தால்தான் முடியும்!' என்று வாதித்தான்.

இரண்டுபேருமே முடிவுக்கு வெகுதூரத்தில் நின்றுகொண்டிருந்தனர்.

அப்பொழுது அவர்களுக்குச் சற்று தூரத்தில்.......

இரண்டு குழந்தைகள்—ஒன்று ஆண்—மற்றொன்று பெண்—விளையாடிக் கொண்டிருந்தன. அந்த ஆண் குழந்தை தன் சிறு கரங்களால் கடல் மணலைக் குவித்தது. பெண் குழந்தை அம் மணலைக் கொண்டு ஒரு சிறிய வீடு கட்டத் தொடங்கியது, விஜயரங்கனும், தினகரனும் தங்கள் விவாதத்தை விட்டுவிட்டு இதை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தனர்.

மணல் வீடு ஒரு வழியாகக் கட்டி முடிந்தது. அந்தக் குழந்தைகள் தங்கள் கைகளில் ஒட்டிக் கொண்டிருந்த மணலைச் சட்டைகளில் துடைத்துக் கொண்டு எழுந்தன.

''சரி......விளையாடலாம் வாண்ணே....'' —அந்த பெண் குழந்தை ஆண் குழந்தையைக் கூப்பிட்டது. அந்த ஆண்குழந்தை சற்று நேரம் என்னமோ யோசனை செய்தது.

''சரி விளையாடலாம் பாப்பா.... ஆனு நான்தான் அப்பாவா இருப்பேன்...'' என்று ஒரு நிபந்தனை போட்டது அந்த ஆண்.

''போண்ணே.......நான் தான் அப்பா...நீ அம்மாவா யிரு....''

''அப்புடின்னு நான் வல்லே!'' —ஒரு முரண்டு முரண்டிக் கொண்டு அந்த ஆண் குழந்தை முகத்தைத் திருப்பிக் கொண்டது.

"அண்ணே......அண்ணே..." —சற்று நேரம் அப் பெண் குழந்தை கெஞ்சியது. ஆனால் அண்ணனுக்கோ மனது இளக வில்லை.

"அப்புடீன்னு நீயே அப்பாவா யிரு...." —தானுகவே விட்டுக் கொடுத்தது.

"ஹூம்ம்......அப்போ சரி.... நான் கடைக்குப் போய் சாமான் வாங்கிகிட்டு வருவேனும்....நீ வீட் டிலேயிருந்து சமைப்பியாம்" என்ன பாப்பா.......

அந்த 'விளையாட்டைப்' பற்றிய முறையை சொல்ல ஆரம் பித்தது.

'க்ளுக்'கென்று விஜயரங்க னும், தினகரனும் சிரித்து விட்ட னர். அந்த சிரிப்புச் சப்தம் கேட்டதுதான் தாமதம், அந்தக் குழந்தைகள் 'சிறகடித்து'ப் பறந்துவிட்டன. அந்தக் குழந் தைகளின் வெட்கத்தைக் கண்ட தும் விஜயரங்கனுக்கு வேடிக் கையா யிருந்தது. ஆனல் தின கரனே அந்தக் குழந்தைகள் ஓடும் திசையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தக் குழந்தைகள் அவன் பார்வையிலிருந்து மறைந்துவிட் டன. அவன் திரும்பினன்.

"விஜயம், என்னென்னமோ இவ்வளவு நாழி பேசிக்கொண்டு வந்தாயே? இதோ பார் இந்த மணல் வீட்டை" அந்த மணல் வீடு உனக்குச் சொல்லும் நான் சொன்னது எவ்வளவு உண்மை என்பதை.

"என்ன தினகரா? இந்த மணல் வீடுதானு உன் வாதத்தை நிலைநிறுத்தப் போகிறது? அதுவே ஒரு அலை வந்து மோதி னல் காணுமல் போயிடுமே!" என்று கிண்டல் செய்தான்.

"நீ இந்த மணல் வீட்டை ஒரு கோணத்திலிருந்து பார்த்து இது போல முடிவு கட்டிவிட்டே! ஆனல் நான், நீ பார்த்து முடிவு கட்டிய கோணத்திலிருந்து, இதைப் பார்த்துப் பேசவில்லை. இது சாதாரண மணல் வீடுதான். கடல் அலை இதன்மேல் பட்டால் கரைந்து மறைந்து விடும் என்ப தையும் நான் மறுக்கவில்லை. ஆனல், இந்த மணல் வீடு கட்ட வேண்டும் என்ற எண்ணம் தானுகவா அந்தக் குழந்தை களுக்கு உண்டாகியது?"

விஜயரங்கன் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தான்.

"விஜயம்....இந்த எண்ணம் இந்தக் குழந்தைகளுக்கு ஏற்பட் டதற்குக் காரணமே சூழ்நிலை தான். அந்தக் குழந்தைகள் தாங் கள் இருக்கும் வீட்டைப் பார்க் கின்றன, அந்த வீட்டிலே தாய், தந்தையர் இருப்பதைக் கவனிக் கின்றன. இந்தச் சூழ்நிலை அந் தக் குழந்தைகளுக்கு இது போன்ற ஒரு கற்பனையை— விளையாட்டை → தூண்டுகிறது. அதன் விளைவுதான் இந்த மணல் வீடு......."

"ஏன் இந்த மணல் வீட்டை எல்லோரும் கட்டிவிட முடி யாதா?"

"ஆம்....இந்த இடத்திலேதான் கொஞ்சம் நிதானம் வேண்டும். எல்லோரும் இந்த மணல் வீட் டைக் கட்டிவிடலாம்! ஆனல் அந் தக் குழந்தைகள் எவ்வளவு ஆர் வத்தோடு, அந்த சூழ்நிலையி லேயே லயித்து இந்த மணல் வீட்டைக் கட்டியதோ அதே

போலக் கட்டமுடியாது. வேண்டுமானல் போட்டிக்கு இதைப் போலவே இன்னென்றைக் கட்டி விட முயலலாம்! ஆனல் அந்த முயற்சியிலேயும் ஓரளவு வெற்றியடையலாம்....''

மேற்கொண்டு என்ன பேசுவதென்று விஜயத்திற்குத் தெரியவில்லே.

''விஜயம்'' சும்மா வயிற்றுப் பாட்டுக்குன்னு செய்கிற எந்தக் காரியத்திலேயும், செய்கிறவன் மனம் ஒன்றிப் போகாது. அப்படி மனம் ஒன்றிப் போகவில்லேயானல் தான் எடுத்துச் செய்கிற காரியத்தின் முடிவு சிறப்பாக அமையாது. சூழ்நிலேயிலே மனம் ஒன்றிப் போகும் தன்மை பொதுவாக எல்லோருக்கும் வந்து விடாது. அதனலேதான் கலேயை எல்லோரும் எப்பொழுதும் செய்துவிட முடியாது என்கிறது, தெரிந்துகொண்டாயா?'' என்று செல்லமாக விஜயத்தின் முதுகில் தட்டினன்.

கடலலே ஒன்று தாவி மணல் வீட்டை மூடியது. பிறகு உள்ளுக்குச் சென்றது,

விஜயரங்கனின் நெஞ்சிலே புகைச்சல், பிறகு அந்த நினேவு மங்கியது.

'எல்லாம் வயிற்றுப்பாட்டுக்குத்தான்......இஹ்ஹிஹூம்' — அவன் உள்ளத்தில் துளேத்துக் கொண்டு சென்ற அந்த வார்த்தைகள் ஒரு மூலேயில் மோதி எதிரொலித்தன.

'தினகரனின் போக்கிலே ஏன் இந்த மாற்றம்?' —அவன் தலேயைச் சொரிந்து கொண்டான். உள்ளத்தில் தோன்றிய 'அரிப்புக்'கு தலேயில் 'சொரிந்து' என்ன பயன்?

தினகரனே, இவனேப் பற்றி ஒன்றும் கவலேப் படாமல், 'பங்களாவுக்கு' வர்ணம் ஏற்றிப் பளபளக்கச் செய்து கொண்டிருந்தான். அவன் கையிலிருந்த தூரிகை, தாளம் தவறவிடாமல் ஆடும் நாட்டியக்காரியின் கால்கள் போல, வேகமாகவும், வர்ணங்களின் சேர்க்கையை அனுசரித்தும் வேலே செய்துகொண்டிருந்தது.

'ஆ'வென்று வாய் பிளந்தவாறு அதையே பார்த்துக் கொண்டிருந்தான் விஜயரங்கன். ஆனல் அவன் உள்ளத்திலிருந்து கிளம்பிய கேள்வி 'உம்'மென்று வாயை மூடிக்கொண் டிருந்தது,

* * *

வீட்டிலே விஜயரங்கனுக்குப் பொழுது போகவில்லே. காண்டேகரின் 'கருகிய மொட்டை' ஒருமுறை புரட்டினன். எத்தனே தடவை தான் அந்த ஒரே புத்தகத்தைத் திரும்பத் திரும்ப படிப்பது? அலுத்துப் போய் அதை மூடிவைத்து விட்டான். ஏதோ ஒரு எண்ணம்—ஆசை அவனே உந்தியது. சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு வெளியே கிளம்பத் தயார் ஆனன்.

''அண்ண, எங்கே இவ்வளவு அவசரமா வெளியிலே கிளம்பப் போறிங்க......'' —சுசீலா சிரித்துக்கொண்டே கேட்டாள்.

''இங்கேயே உட்கார்ந்து இருந்தா பொழுது போகமாட்டேன்குது சுசீலா! அதுதான் இப்படியே....இங்கே ஒரு சினேகிதன் இருக்கான். அவனேடு பேசிவிட்டு வரலாம்னு கிளம்பினேன்.''

"ஏன் அண்ணே, வந்து நாலு நாள் ஆகல்லே! இங்கேயும் ஒரு சிநேகிதனைப் புடிச்சிகிட்டீங்களா? அப்போ சரி." —அவள் பேச்சிலே பாதி கிண்டலும் பாதி மகிழ்ச்சியும் கலந்து இருந்தன.

"ஒண்ணும் புது சினேகித மில்லே சுசிலா.........எல்லாம் பழைய சிநேகிதன் தான். நேற்று அவனை எதிர்பாராது சந்தித்தேன். அவன் ஒரு பெரிய 'ஆர்டிஸ்ட்'. அவன் வீட்டுக்குப் போனாலும் எதுவும் புதுப் படங்களையாவது பார்த்து வரலாம். வேறே இந்தப் பட்டிக்காட்டிலே பார்க்கிறதுக்கு ஏற்றாப்போல என்னதான் இருக்கிறது?"

"அது யார் அண்ணே, இங்கே அப்பேர்ப்பட்ட 'ஆர்டிஸ்ட்'?"

"தினகரன்னு பேரு! முந்தி பட்டணத்திலே தான் இருந்தான்."

"யாரு, தினகரனா? இந்த தைக்கால் தெருவிலே நாலாவது வீட்டிலே இருக்கிறாரே அவரா?" —ஏதோ நெருப்பை மிதித்து விட்டவள் போலக் கேட்டாள்.

"அவனேதான்! அவன் பெயரைக் கேட்டவுடனே நீ ஏன் இப்படிப் பதறுரே!"

சுசீலாவின் முகம் விகாரமடைந்தது.

"அண்ணா.....உன்னை ரொம்ப பணிவாக் கேட்டுக்கிறேன். நீ அந்த தினகரனோடே பழகாதே அண்ணே"—அவள் குரலில் ஒரு படபடப்பு.

இதைக் கேட்டதும் விஜயரங்கனுக்குத் திகைப்பு ஏற்பட்டது.

"ஏன் சுசிலா?" என்று ஒன்றுமே புரியாமல் திணறிக் கொண்டு கேட்டான்.

"அவனைப் பத்தி உனக்கு என்னண்ணே தெரியும்? அந்தப் பாவிப் பயல் கிளிபோல இருந்த பெண்டாட்டியையே கொன்னு போட்டுட்டான். அவன் முகத்திலே முழிச்சாக்கூட மூனு நாளைக்குச் சோறு கிடைக்காது........"

"என்ன தினகரனுக்கு கல்யாணம் ஆயிட்டா!"

"ஹூம்....அவன் கல்யாணம் மாத்திரமா பண்ணிக் கொண்டான். ஆறு மாதத்துக்குள்ளே அந்தப் பெண்ணைக் கொன்னுல்லே போட்டுட்டான்! பெண்ணுன்னாலும் பெண்ணு சும்மாத் தங்க விக்கிரகம் மாதிரி! சரோஜாங்கிற பேருக்கு ஏற்றாப் போலவே அப்படியே அந்த 'ரோஜாப்பூ கலர்' தான்! இந்த பாவி என்ன செய்தானோ முதல் நாள் சாயங்காலமெல்லாம் நல்லாயிருந்த பெண்ணு "றுநாள் காலையிலே செத்துப் போய்க் கிடக்குது!"

"இதெல்லாம் நிஜம் தானா சுசிலா?–" அவனுக்கு ஏதோ தலையில் இடிவிழுந்தது போன்ற ஒரு அதிர்ச்சி. அவன் உடலெல்லாம் பதறியது.

"நான் என்னத்துக்குப் பொய் சொல்லனும்? இது ஊரறிந்த ரகசியம்.......அந்த சரோஜாவும் நானும் ரொம்ப சிநேகிதம், தினசரி அவள் என்னை ஒருமுறை பார்ப்பதற்குத் தவறவே மாட்டாள். ரொம்பத் தங்கமான குணம், இந்தப் பாவிப் பயல் மேலே அவள் எவ்வளவு பிரியம் வைத்திருந்தாள் தெரியுமா?"

"அவ்வளவு பிரியமா யிருந்த பெண்ணையா கொன்னுட்டான்?"

"ஆமாம்...ஆமாம்...ஆமாம்... நான் சொல்றதிலே உனக்கு

இன்னுமா சந்தேகமா யிருக்கு? முதல் நாள் சாயந்திரம் என் கிட்டே ரொம்ப நல்லபடியாப் பேசிட்டு போச்சு! மறு நாள் காலேயிலே என்னுன்னு தூக்கு போட்டுகிட்டு செத்துப் போயி டுத்துன்னு சொல்ருங்க! எப்படி இருக்கு அண்ணே கதை!''

''முதல்லே நீ தினகரன் அந்தப் பெண்ணைக் கொலே செய்துட்டான்னு சொன்னே! இப்போ அது தூக்குப் போட்டுகிட்டுதுன்னு சொல்றே. எனக்கு ஒண்ணுமே புரியல்லே சுசிலா....சே.... உனக்கு தினகரனைப் பற்றித் தெரியாது! அவன் கொலே செய்திருக்க மாட்டான். அவன் ரொம்ப நல்லவன் ........இந்தப் பெண்ணுதான் தானகவே தூக்குப்போட்டுக் கொண்டிருக்கும்!''

''எனக்கு தினகரனைப் பத்தித் தெரியாது. ஆனல் சரோஜா வைப்பத்தி நன்ருகத் தெரியும். அவள் முதல் நாள் பேசிக் கொண்டு இருந்த போதுகூட இந்தத் தினகரனைப்பற்றி எவ்வளவு உயர்வா சொல்லிக் கொண்டிருந்தாள் தெரியுமா? அவ்வளவு பிரியம் புருஷன்மேலே வைத்திருந்தவள் ஏன் தற்கொலே செய்து கொள்ளணும்?''

''அதுசரி சுசீலா! தினகரன் கொலே செய்ததாகவே வைத்துக் கொள்வோம்! போலீஸ்காரர்கள் அவன்மேலே நடவடிக்கை எடுக்காமலா இருந்தாங்க?''

''விசாரணைன்னு ஏதோ நடத்தினுங்க....ஆனல் உன் கூட்டாளி, சரோஜா இறந்தன்னைக்கு இராத்திரி வீட்டிலேயே இல்லே. ஏதோ ஒரு ஜமீன்தார் வீட்டிலே இருந்தேன்னு சொல்லித் தப்புச்சிக் கிட்டான். அடேயப்பா அன்றைக்கு அவன் போலீஸ்காரர்களை ஏமாற்றுவதற்கு என்னு அழுகை அழுதான் தெரியுமா? அந்தப் போலீஸ்காரன்களும் முட்டாள் பசங்க....இவனை விட்டு புட்டானுங்க! அண்ணு நீ அவன் முகத்தைக் கொஞ்சம் கவனிச்சுப் பாரேன், என்னமோ பேய் அறைந்தது மாதிரி இருக்கும்! பெண் பழி பாரு, அது அவனை விட்டுப்புடுமா?''

விஜயரங்கன் தினகரனின் இப்போதைய முக மாறுபாட்டை நினைவுபடுத்திப் பார்த்தான். ஆனல் இதை வைத்துக்கொண்டு அவனைக் 'கொலேகாரன்' என்று முடிவு செய்வது சரியா? என்ற ஒரு எண்ணம் தோன்றியது.

''அண்ணே, இனிமேல் நீ அவனேடு பழகினே என்னை உயிரோடு அறுத்துத் தின்னுப் போல்.......ஆமாம்....''

விஜயம் சுசிலாவை அண்ணுந்து பார்த்தான். அவள் உதடுகள் நடுங்கிக் கொண்டிருந்தன. கண்களிலே நீர் கசிந்து கொண்டிருந்தது, அவள் முகத்தைக் கவிழ்த்தபடி 'விர்'ரென்று உள்ளே போய்விட்டாள்.

அவனுக்கு 'சரோஜாவின் சாவின் மர்மம்' விளங்கவில்லே. ஆனல்.......

'தினகரன் தனக்குக் கல்யாணம் ஆனதை ஏன் சொல்லவில்லே?' என்று அவன் உள்ளத்திலே ஒரு சந்தேகம்.

'தினகரன் ஒருக்காலும் கொலே செய்திருக்க மாட்டான்.... சரோஜா தற்கொலே தான் செய்து கொண்டிருக்க வேண்

சந்தேகத்துக்கும், நட்பு ஏற்படுத்திய நம்பிக்கைக்கும் ஒரு பெரிய போராட்டம். சற்று நேரம் தத்தளித்தான்.

'ஒருவேளை இந்த சரோஜா தவருன நடத்தையுள்ளவளாக இருந்து, அதை தினகரன் அறிந்து, கணவனுக்குத் தன்னுடைய 'குட்டு' தெரிந்து விட்டதே என்ற எண்ணத்தில் சரோஜா தற்கொலை செய்து கொண்டிருக்கக் கூடாதா?'

அவனே சமாதானம் கூறிப் பார்த்துக்கொண்டான். ஆனல் அந்தச் சமாதானம் 'இன்னும் புதிய சிக்கல்களை யெல்லாம் கிளப்பிவிட முடியும்' என்று அவனை நோக்கிச் சீறியது. ஆனல் அவன் முரட்டுத்தனமாக அந்தச் சமாதானத்தின் வாயை இறுக மூடிவிட்டான்.

என்னமோ ஒருவழியாக மனப் போராட்டம் ஓய்ந்து விட்டது! ஆனல் உள்ளத்திலே சாந்தி வில்லை!

* * *

வானத்தின் கிழ்க்கோடியில் விடிவெள்ளி தோன்றி மின்னியது! திண்ணையில் படுத்திருந்த விஜயரங்கனுக்கு தூக்கம் கலைந்துவிட்டது. ஆனலும் 'ஊதல் காற்று' அவனை எழுந்திருக்க விடவில்லை. போர்வையால் முகத்தை மறைத்துக் கொண்டு புரண்டு பார்த்தான். பாழும் தூக்கம் மறுபடியும் வர மாட்டேன் என்று 'அடம்' பிடித்தது!

'சடசட'வென்று ஏதோ முறிந்து போன்ற ஒரு சப்தம் கொல்லைப்புறத்திலிருந்து கேட்டது. அவன் வாரிச் சுருட்டிக்கொண்டு 'அது என்ன சப்தம்' என்று அறிவதற்கு கையில் 'டார்ச் லைட்'டை எடுத்துக் கொண்டு கிளம்பினன்.

'திடு திடு'வென்று ஏதோ ஓடுவது போல ஒரு சந்தடி. அந்த சந்தடி ஏற்பட்ட திசையை நோக்கி 'டார்ச் லைட்'டை அடித்தான். ஒரு கன்றுக்குட்டி துள்ளி ஓடிக்கொண்டிருந்தது.

'இம்ம்......'மென்று அவன் தன்னை 'ஆசுவாசப்படுத்தி'க் கொண்டான். கொல்லைப் புறத்தை வந்து பார்த்தான். அங்கே வேலியிலே கட்டப்பட்டிருந்த படல் சின்னபின்னமாகக் கிடந்தது.

'டார்ச் லைட்,டை அடித்துக் கொல்லைப்புறமெல்லாம் சுற்றிப் பார்த்தான். அங்கே கிடக்கும் சாமான்களெல்லாம் அப்படியேதான் கிடந்தன. ஆனல் கொட்டடியில் தாம்புக் கயிறு மட்டும், தலையைப் பறிகொடுத்து விட்டுக் கிடந்தது! அவனுக்கு விஷயம் ஒருவாறு புரிந்துவிட்டது! அவன் ஓடிப்போன அந்தக் கன்றுக்குட்டியைப் பிடித்துவர, அது போன திசையை நிதானம் செய்து கொண்டு கிளம்பினன்.

தூரத்தில் கன்றுக் குட்டியின் துள்ளல் நடைச் சப்தம் கேட்டது. அவன் வேகமாக அதனைப் பின் பற்றினன். ஆனல் சற்று நேரத்தில் அந்தச் சப்தம் நின்று விட்டது. அவன் திகைத்து நின்றான். அவனுக்குச் சமீபத்தில் ஏதோ 'சலசல'த்தது. அவன் அந்தப் பக்கத்தை உற்று நோக்கினன். ஒரு செடி மறைவில் ஏதோ வெண்மையாகத் தெரிந்தது. அவ்வளவுதான்! ஓசைப்படாமல் மெள்ள மெள்ள நடந்து அதனருகில் சென்றான். அவனுக்கும்

கன்றுக்குட்டிக்கும் இடையில் கொஞ்ச நேரம்தான் இருந்தது. 'பளிச்'சென்று ஒரு ஒளி அவன் முகத்தில் பட்டது. அதைத் தொடர்ந்து "யாரது?" என்று ஒரு குரல் கேட்டது.

அவன் உடலில் ஏனோ ஒரு நடுக்கம்! ஆனாலும் 'சட்'டென்று பாய்ந்து செடி மறைவில் நின்று கொண்டிருந்த கன்றுக் குட்டியைப் பிடித்துவிட்டான்.

"யாரது?" —அந்தக் குரலில் கடுமை அதிகமாகத் தொனித்தது. விளக்கு ஒளி அவனை நெருங்கியது.

"இந்தக் கன்றுக்குட்டி கட்டு அவிழ்த்துக் கொண்டு ஓடியாந்தது! அதைப் பிடிக்கிறதுக்காக வந்தேன்," என்று குழைவான குரலில் விஜயம் பதிலளித்தான்.

"யார் விஜயமா! சரி....சரி.... வா! எங்கே நாலு நாளாய் உன்னை இந்தப் பக்கமே காணோம். நீ எங்கே ஊருக்குப் போயிட்டியோன்னு நினைச்சேன்!" —ஒரு கையில் விளக்குடனும், மற்றொரு கையில் ரோஜாப் பூக்களுடனும் காட்சியளித்தான் தினகரன்.

"இது என்ன உங்க வீட்டுத் தோட்டமா, தினகரா!" —அவனுக்கு ஒரே ஆச்சரியம்!

"ஆமாம், அந்தக் கன்றுக்குட்டியைக் கட்டிப் போட்டுவிட்டு உள்ளே வாயேன்!"

விஜயத்தின் இதயத்திலே ஒரு குமுறல். அவன் நினைப்புகள், சுசீலா சொன்ன வார்த்தைகளை வட்டமிட்டது. இருந்தாலும் அவன் அழைப்பை நிராகரிக்கும் அளவிற்கு விஜயத்தின் நெஞ்சிலே துணிவில்லை. 'உள்ளே போவதா? வேண்டாமா?' என்று திகைத்தான், திண்டாடினான்.

"இம்ம்.......என்ன விஜயம் கையிலே கன்றுக் குட்டியைப் பிடித்தபடியே நிற்கிறே?"

"ஒண்ணுமில்லே... ...இதோ வந்துட்டேன்......" —ஒரு அசட்டுச் சிரிப்பு. கையிலிருந்த கன்றுக்குட்டியை ஒரு மூலையில் கட்டினான். அந்தக் கன்றுக்குட்டி அந்தக் கயிற்றை அப்படியும் இப்படியுமாக இழுத்துக் கொஞ்சம் முரண்டிப் பார்த்தது. ஆனால், அந்த இணைப்பிலிருந்து அதனால் அறுத்துக்கொண்டு போக முடியவில்லை. பிறகு அடக்கமாக அவ்விடத்திலேயே சுற்றிக்கொண்டு நின்றது!

விஜயரங்கன், தினகரன் பின்னால் வீட்டினுள் நுழைந்தான்.

முன்னால் சென்று கொண்டிருந்த தினகரன் ஒரு அறைக்குள் நுழைந்தான். விஜயரங்கனும் அவனுடன் கூடவே சென்றான். அந்த அறையின் மத்தியில் சுவற்றிலே ஒரு படம் மாட்டப்பட்டிருந்தது. அதனருகில் சென்றதும், தினகரன் கையிலிருந்த விளக்கைக் கீழே வைத்துவிட்டு, அந்தப் படத்திற்கு, தன் மற்றொரு கையில் வைத்திருந்த ரோஜா மலர்களைச் சூட்டினான்.

விஜயரங்கன் விளக்கின் ஒளியிலே அந்தப் படத்தைப் பார்த்தான். கையிலே ரோஜா மலரேந்தி கன்னங் குழிய சிரித்துக் கொண்டிருக்கும் ஒரு அழகிய பெண்ணின் உருவம் அதிலே சித்தரிக்கப்பட்டு இருந்தது. விஜயரங்கன் தன்னுடைய பார்வையைத் திருப்பினான். தினகரன் தன்னிரு கரங்களால் முகத்தை மூடிக் கொண்டு விம்மி விம்மி

அழுது கொண்டிருந்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை!

"தினகரா..." —அவனுடைய வருத்தத்தைக் காணச் சகியாது, அவன் முதுகிலே தட்டி, அவனை ஆசுவாசப்படுத்த முயன்றான். ஆனால் ... ....

"விஜயம் வா வெளியே போய் விடுவோம்" —என்று அவனை 'பர பர'வென்று இழுத்துக் கொண்டு வெளியே வந்து விட்டான்.

தினகரனின் போக்கே அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது. 'ஹாலில்' அவர்கள் இருவரும் அமர்ந்தனர். தினகரனின் முகத்தை மூடியிருந்த சோகத் திரை விலகவில்லை.

"தினகரா! அது யாருடைய படம்?......" —அதுவரையில் அடங்கிக் கிடந்த சந்தேகம் தானாகவே உடைத்துக்கொண்டு வெளி வந்தது.

"அது என்னுடைய மனைவி சரோஜாவின் படம்" —அவன் தலையைக் குனிந்து கொண்டே 'கேவிக் கேவி' அழ ஆரம்பித்தான்.

அவனுடைய போக்கு விஜயரங்கனுக்கு விசித்திரமாக இருந்தது. அதே வேளையில் அவன் தன்னுடைய மனைவி மீது வைத்திருக்கும் அன்பைப் பார்க்கும் போது வேதனையுமாக இருந்தது. 'இவ்வளவு பிரியம் மனைவி மேல் வைத்திருக்கும் இவன், சரோஜாவைக் கொன்றிருப்பான்' என்பதை அவனால் நம்பவே முடியவில்லை. 'அப்படியானால் உண்மை என்னவாயிருக்கும்?' —விஜயத்தின் மனதில் ஒரு துடிதுடிப்பு.

"தினகரா, ஏன் நீ உன்னுடைய மனைவி படத்தைப் பார்த்து இப்படி மனம் கலங்குறே! ஒரு வேளை......!" —ஒன்றும் தெரியாதவன் போலக் கேட்டான்.

"சரோஜா இறந்துபோய் விட்டாள் என்று நினைக்கிறாயா விஜயம்? அவள் இறக்கவில்லை...... கொலை செய்யப்பட்டாள்......... அதுவும் என்னாலேயே!"

"ஆ..." விஜயரங்கன் திகைத்துப்போய் ஊமையானான்.

"ஆச்சரியப்படுகிறாயா விஜயம்? நான்தான் அவளைக்கொன்றேன்....என்னுடைய முட்டாள் தனம்தான் அவளைக் கொன்று விட்டது! இல்லாவிட்டால் என் அருமை சரோஜா தூக்குப் போட்டுக்கொண்டு இறந்திருக்க மாட்டாள்......" —ஏதோ வெறி பிடித்தவன் போல அவன் பேசிக் கொண்டு போனான்.

"தினகரா! நீ சொன்னது எனக்கு ஒண்ணுமே புரியவில்லை! கொஞ்சம் புரிகிற மாதிரியாகிலும் சொல்லேன்!"

"விஜயம், என் கண்மணி சரோஜாவை நானே இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அப்படியிருக்கையில் உனக்கு எப்படி அவள் குணத்தைப் புரியவைப்பேன்?"

"தினகரா, நான் ஒண்ணு கேட்கிறேன், நீ ஒன்னு பதில் சொல்லிக்கொண்டு வருகிறாயே! ஏன் உன்னுடைய மனைவி தூக்குப் போட்டுக் கொண்டு இறக்க வேணும்? அதைப்பற்றிக் கொஞ்சம் விபரமா சொல்லப்பா!"

"அதுவா.........இம்ம்...." —ஒரு நீண்ட பெருமூச்செறிந்தான். சற்றுநேரம் 'ஏகாக்கிரஹ' சிந்தையில் ஆழ்ந்து இருந்தான்.

"விஜயம் நீ எப்போதாவது பனிமலரைப் பார்த்து இருக்கிறாயா? இம்ம்....உனக்கு எங்கே அதைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கப் போகிறது? சரி இங்கே வா, அதை உனக்குக் காட்டுகிறேன்!'' என்றுசொல்லி அந்தப் படம் இருந்த அறைக்குள் சென்றான். விஜயரங்கனுக்கு, அவனுடைய செய்கைகளின் பொருள் ஒன்றும் புரியவில்லை என்றாலும், 'சரோஜாவினுடைய சாவின் மர்மத்தை' அறிய வேண்டும் என்ற ஆசையால், அவனும் தினகரன் பின்னாலேயே அந்த அறைக்குள் சென்றான்.

தினகரன் சரோஜாவின் படத்திற்கு சூட்டப் பட்டிருந்த ரோஜா மலர்களில் ஒன்றை எடுத்து விஜயத்தின் கையில் கொடுத்தான். விஜயரங்கன் அந்த மலரைப் பார்த்தான். அந்த மலரின் இதழில் ஒரு பனித்துளி முத்துபோல விழியுருட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.




"பார்த்தாயா விஜயம். இதைத்தான் பனிமலர் என்று ரொம்பப் பெருமையாகச் சொல்லுவார்கள். பனித்துளி இதிலே ஒட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்த பிறகும், இதைத் தீண்டாத பனிமலர் என்று இன்னும் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். பைத்தியக்காரர்கள்....! என் சரோஜாவிற்குக் கூட இது போன்ற மலரைக்கண்டால் ரொம்பப் பிரியம். ஆனால் அவள் இந்த மலரைப்போல பனி தீண்டிய பிறகும் தீண்டாத பனிமலர் என்ற பெயரோடு பெருமையாக வாழவில்லை. அவள் மானத்தை மாசு தீண்டியதும் மடிந்து விட்டாள்......''—அவன் கண்களிலிருந்து நீர்த் திவலைகள் உருண்டன.

"விஜயம், சரோஜாவை இழந்ததற்குப் பிறகுதான் அவளை என்னால் ஓரளவு புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் அவள் உயிரோடு இருந்தவரையில், அவளை நான் காதலித்தேன். என் கலைத் தொண்டிற்கு ஒரு தூண்டுகோலாக உபயோகப்படுத்தினேனே தவிர அவள் உள்ளத்தை நான் புரிந்து கொள்ளவே யில்லை''—சோகம் அவன் தொண்டையைப் பிடித்து அழுத்தியது—இதைக் கேட்டதும் விஜயரங்கனுக்கு நெஞ்சு நெகிழ்ந்தது.

"தினகரா...வீணாக மனதைச் சிதறவிட்டு விடாதே! இம்ம்...... என்ன செய்வது? சரி...அப்புறம்?''

''இம்....கண் கெட்ட பிறகு சூரிய வணக்கம் செய்து என்ன பிரயோசனம்? கேள் விஜயம்! நானும் சரோஜாவும், எங்களுக்குக் கல்யாணம் ஆனதிலிருந்து ரொம்ப அன்னியோன்யமாகத் தான் வாழ்ந்து வந்தோம். எங்கள் இரண்டுபேருக்குள்ளேயும் ஒரு கருத்து வேற்றுமைகூட ஏற்பட்டதில்லை. அவள் தூக்கு மாட்டிக்கொண்டு இறந்த அன்று சாயந்திரம் வரையில், என்னிடம் மருதூர் ஜமீன்தார் ஒரு பெண் படம் வரைந்து தரும்படிக் கேட்டிருந்தார். அதற்காக நான் ஒரு பெண் படத்தை வரைந்து வைத்திருந்தேன். அந்தப் படத்தைப் பார்த்தவுடன் சரோஜா என்னிடம் வந்து, ''முதலில் இந்தப் படத்தைக் கிழித்து எறிந்து விடுங்கள். ''இது என்ன ஆபாசம்! ஆடையை யெல்லாம் அலங்கோலப்படுத்தி, அங்கங்களை யெல்லாம் வெளியே தெரிகிற மாதிரி எழுதி யிருக்கிறீர்களே'' என்று ரொம்பக் கோபமாகச் சொன்னாள். எனக்கு அவளுடைய கோபத்தைப் பார்த்ததும் மிகவும் வேடிக்கையாக இருந்தது. நான் சிரித்துக்கொண்டே, 'சித்திரத்துடைய அழகு பூர்த்தியாக வேண்டுமானால் அதற்கு இதுமாதிரிதான் செய்ய வேண்டும். அதிலே ஒன்றும் குற்றம் கிடையாது! வேண்டுமானால் பாரேன், இந்தச் சித்திரத்தை நான் மருதூர் ஜமீன்தாரிடம் கொண்டுபோய் கொடுத்தேனானால் ரூபாய் அள்ளிக் கொட்டி விடமாட்டான்' என்று சொன்னேன்.

'அவன் பணம் கொடுப்பான் என்பதற்காக இந்தப் படத்தை வரைந்தீர்களா? காசுக்காக மானத்தை விலை கூறுவார்களா யாரும்? ஐயோ....வேண்டாம்...' என்று என்னிடம் அவள் மிகவும் கெஞ்சினாள்.

ஆனால் நான் அவளுடைய பேச்சை யெல்லாம் வேடிக்கையாக எண்ணி, விளையாட்டுத்தனமாக அவளிடம் பிடிவாதம் பிடித்துக்கொண்டு, அந்தப் படத்தை எடுத்துக் கொண்டு மருதூர் ஜமீன்தார் வீட்டிற்குச் சென்று விட்டேன். அங்கே அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு அந்த ஜமீன்தாரும் ரொம்ப மகிழ்ச்சியடைந்தார். எனக்கும் கைநிறையப் பணம் கிடைத்தது. நான் ரொம்ப மகிழ்ச்சியோடு வீடு திரும்பினேன். வீட்டிலே என் மனைவி சரோஜா தூக்குப் போட்டுக் கொண்டு தொங்கிக்கொண்டிருந்தாள்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அவள் பிணத்தினடியில் என் விலாசமிட்ட ஒரு கடிதம் கிடந்தது. எடுத்துப் படித்தேன்;

'அன்புள்ள தங்களுக்கு,

இந்தக் கடிதத்தைத் தாங்கள் பார்க்கும்போது நான் பிணமாகி இருப்பேன் என்பது உறுதி. இந்த மண்ணிலே பிறந்த எந்தப் பெண்ணும் தன்னுடைய அழகை அன்னிய ஆடவர்களின் 'அழகு ரசனைக்கு' விருந்தாக்க விரும்பமாட்டாள். தாங்களோ பெண்மையின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல், பணம் கிடைக்குமென்ற ஒரே காரணத்தால், என்னுடைய உருவத்தையே அலங்கோலமாக்கி, மற்றொருவனின் மாளிகையில் பலபேர்கள் பார்க்கும்படியாக

இந்நேரம் விலை கூறி யிருப்பீர்கள்!!

எனக்கு மானம்தான் பெரிது! இனி நான் வாழ விரும்பவில்லை!! தாங்கள் இனிமேலாவது இது போன்ற விஷப் பரீட்சைகள் செய்ய வேண்டாம் என்று வேண்டிக் கொள்கிறேன்.

எனது இறுதி வணக்கங்கள்,
சரோஜா.

என்று எழுதியிருந்தது.

—தினகரனின் கண்களில் நீர் தாரை தாரையாக வடிந்தது. அவன் பேச்சுத் தடைப்பட்டது. இதைப் பார்த்த விஜயரங்கனுக்கும் ஏனோ கண்ணீர் துளிர்த்தது.

"தினகரா....இனிமேல் எதை நினைத்துத்தான் என்ன பயன்? ஆனாலும் ஒன்று! நீ உன்னுடைய மனைவியுடைய படத்தையே அது மாதிரி வரைந்து விற்று இருக்கவும் கூடாதுதான்!......."

"விஜயம் நீ அந்த இடத்திலே தான் தவறு செய்யறே! நான் வேண்டுமென்றே என்னுடைய மனைவியின் படத்தை அதுபோல் வரையவில்லை! நான் ஒரு அழகானபெண்ணை வரையவேண்டும் என்று கற்பனை செய்து வரைந்தேன். ஆனால் அந்த உருவத்திலே சரோஜாவின் சாயல் தென்பட்டுவிட்டது போலிருக்கிறது! ஆனால் அதை நான் கவனிக்கவேயில்லை."

"நீ பேசுவது ரொம்ப வேடிக்கையா யிருக்கிறது, தினகரா! அது எப்படி நீ அறியாமல், நீ வரைகிற படத்திலே சரோஜாவின் சாயல் வந்துவிடும்?"

"என்னுடைய மனதிலே சரோஜாவுக்குத் தவிர, வேறுயாருக்கும் நான் இடம் கொடுத்தது கிடையாது விஜயம். அவள் ஒருத்திதான் என் மனதிலே தனி அரசு செய்து வந்தாள். அந்தச் சமயத்திலேதான் ஒரு அழகான பெண்ணைக் கற்பனை செய்ய முயன்றேன். ஆனால் என் மனம் ஒன்றிப்போன என் காதல் மனைவியின் உருவத்தின் பிரதிபலிப்பாகத்தான் என்னால் கற்பனை செய்ய முடிந்ததே தவிர, வேறு எந்தப் பெண்ணுருவத்தையும் என்னால் கற்பனை செய்ய முடியவில்லை! கற்பனை என்று வந்த உருவத்தைக் கை வரைந்தது.... ஆனால் ஒன்றை மட்டும் மறந்து விடாதே விஜயம்...நான் அந்தப் படம் வரைந்து முடிந்தவுடன், அதிலே சரோஜாவின் சாயல் தென்படுவதைக் கவனிக்கவேயில்லை. அதை நான் அப்பொழுதே கவனித்து இருந்தால்....'

—ஒரு பெருமூச்சு விட்டான்.

இதைக் கேட்டதும் விஜயரங்கனுக்குப் பரிதாபமாகப் போய் விட்டது. அவன் அண்ணாந்து உயரே மாட்டியிருந்த அந்தப் படத்தைப் பார்த்தான். அந்தப் படத்திலே...' சரோஜா சிரித்துக் கொண்டிருந்தாள். அவள் கையிலிருந்த அந்த மலர்.......?' நன்றாகப் பார்த்தான். அதிலே ஒரு பனித்துளி ஒட்டிக் கொண்டிருந்தது, திரும்பத் தன் கையிலிருந்த மலரைப் பார்த்தான், விளக்கு ஒளியிலே அந்த மலரில் ஒட்டிக் கொண்டிருந்த பனி முத்து கண் சிமிட்டிக் கொண்டிருந்தது.

விஜயன் தினகரனைப் பார்த்தான். அவன் விழிகளிலும் நீர் முட்டிக் கொண்டிருந்தது. ஆனால் அவள் மட்டும் சிரித்துக் கொண்டே இருந்தாள்!

# கரிகாலன் கோபம்

"தமிழ்த்தும்பி"

மாட மாளிகைகளும், கூடகோபுரங்களும் நிறைந்தது அந்த ஊர். செல்வம் படைத்த நாடு என்பதைத்தான் மிகுந்து காணப்பட்ட மாடி வீடுகள் உணர்த்தின. விருந்தினர்கள் எப்போதும் அவ்வூரில் மலிந்திருப்பர். ஊர் காண வருவோர் கூட்டம் என்றென்றும் அவ்வூரில் திரிந்து கொண்டிருக்கும்.

வளைந்த கால்களையுடைய ஒரு மாடம். அதன் பெரிய தலை வாசலில் விருந்துக்கு வந்தவர்கள் நெருக்கமாக இருந்தனர். வீட்டுக்கு உரியவர் அவர்களை வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்றார். எதிர்பாராது விருந்தினர் வந்திருந்தாலும், விருந்து தருபவர் மலைக்கவோ, சளைக்கவோ, மனவருத்தப்படவோ இல்லை. மாறாக, புது மலர்ச் சிரிப்பு ஒன்றை மகிழ்ச்சியோடு உதிர்த்தார். சமைக்க நேரம் ஆயிற்றேயொழிய, உணவு தானியம் இல்லாமற் போய்விட வில்லை. அறுசுவை உண்டியினை எல்லோரும் புசித்த பின்னும் சோறு குறையாது மிகுந்தே கிடக்கிறது. அவ்வளவு பெரிய அடுப்பில் சோற்றை ஆக்கியிருந்தனர்.

சிறந்த சுண்ணாம்பு பூசப்பட்டிருந்ததால் சுவர்கள் பிரகாசத் தோடு மின்னின. மிஞ்சின சோற்றை அந்த நல்ல வீட்டில் வசிப் பவர்கள் மிழற்றும் பைங்கிளிகளுக்கு ஊட்டினர். மழலை பேசி மகிழ்விக்கும் பச்சைக் கிளிகள் என்னென்னவோ பேசி அமுது படைத்த அணங்குகளை மகிழ்வித்தன. சோற்றுக்குப்பின் பாலை யும் கொடுத்து அப்பாவைகள் கிளியோடு கொஞ்சி விளையாடினர். பாலும், அமுதும் உண்ட கிளி இன்மொழிக் கிளவிகளை மொழிந்து அவர்களைப் பரவசப்படுத்தியது. சோற்று வளமும், இன்பப் பெருக்கும் அப்படிப் பெரும் அளவில் கிடைத்தது அவ்வூரில்.

*　　*　　*

கொஞ்ச நாட்கள் ஓடின. அதே ஊர் இப்போது முற்றும் மாறிவிட்ட சோகக் காட்சியை அளித்தது. முன் கிள்ளை மொழி யினைக் கேட்ட உயர்ந்த திண்ணைகள் இப்போது மனிதப் பூண்டற் றுக் கிடந்தன. சிரித்து மகிழ்ந்த சீமான் வீட்டுச் சிங்காரிகள் இல்லாமற் போய் விட்டனர். விருந்து சாப்பிட விருந்தினர் காணா மற் போய்விட்டனர்; விருந்தினரை வரவேற்று உபசரிக்கும் பெரி யோர்களும் மறைந்து விட்டனர். குதூகலமும், பரவசமும் துள்ளி

விளையாடிய மாடி வீடு சோகம் ததும்ப, இருள் சூழ்ந்து கிடந்தது. வெண்மையான சுவர்கள்கூட மங்கிச் சிதைந்து கிடந்தன.

கிளி மிழற்றிய இடத்தில் இப்போது கூகை பட்டப்பகலி லேயே கூவியது. மனித சஞ்சாரமே இல்லாது போய்விட்டதால் கூகையின் அலறலும், கதறலும் பயங்கரமாக இருந்தது. நெற் கூடுகளிலுள்ள தானியங்கள் கொள்ளையடிக்கப்பட்டு வெறுங்கூடு கள் இருப்பது போலத் தோன்றின.

* * *

என்ன விநோதமான மாறுதல்! முன் மக்கள் கூட்டம் பெருகி வாழ்ந்த நகரம் பாழ்பட்டுக் கிடந்தது. இன்பமும், மகிழ்ச்சியும் போய் துன்பமும், துயரமும் சூழ்ந்தன.

இதற்கு என்ன காரணம் தெரியுமா? கடியலூர் உருத்திரங் கண்ணனுர் காரணம் சொல்கிருர், அவரையே கேளுங்கள்! சோழர் குலச் செம்மலான கரிகாற்பெருவளத்தானை அவ்வூரையாண்ட மன்னன் எதிர்த்தான். பகைமன்னன் நாட்டைக் கரிகாலன் படை கள் தாக்கின. முன் விவரித்த காட்சி தாக்குதலுக்கு முன்பிருந்த இன்பக்காட்சி! பின் சொன்ன சோகக் காட்சி பகை மன்னனது அழிவுக்குப்பின்!

கரிகாலன் கட்டளையிட்டதுதான்தாமதம், போர் தொடங்கியது. கொள்ளை கொள்ளையாக நெல் கிடந்த கிடங்குகளை அவர்கள் கொள்ளை யடித்தனர். கொள்ளையடித்த உணவினை ஆசையோடு உண்டனர். நகரம் அழகை இழந்தது. பகைவரது குலம் இல்லாமற் போய்விட்டது. இன்னும் கரிகாலனது கோபம் அடங்கவில்லை,

* * *

நள்ளிரவில் கூவவேண்டிய கூகை நண்பகலில் அலறுகிறது என்ருல் மக்கள் இனம் எப்படி அழிந்து விட்டிருக்க வேண்டும்? மர உச்சிகளில் அமரவேண்டிய கூகை, தானியங்கள் சேமித்து வைக் கும் நெற்கூடுகளில் அமர்கிறதாம்! அப்போது எவ்வளவு நாசம் ஏற்படவேண்டும்! பாழ், பாழ், பாழ், எங்கும் பாழ்! கரிகாலனது படைவன்மையைத்தான் இவ்வர்ணனை நம்மை உணர வைக்கிறது.

கொடுங்கான் மாடத்து நெடுங்கடைத் துவன்றி
விருந்துண்டு ஆனுப் பெருஞ்சோற்று அட்டில்
ஒண்சுவர் நல்இல் உயர்திணை யிருந்து
பைங்கிளி மிழற்றும் பாலார் செழுநகர்த்
தொடுதோல் அடியர் துடிபடக் குழீஇக்
கொடுவில் எயினர் கொள்ளை உண்ட
உணவில் வறுங்கூட்டு உள் அகத்திருந்து
வளைவாய்க் கூகை குழறவும்.

—பட்டினப்பாலை.

[கோடு = வளைந்த; ஆனு = குறையாது கிடக்கும்; அட்டில் = அடுப்பு; ஒண்சுவர் = ஒளிமிக்க சுவர்; தொடு = அணிந்த; தோல் அடியர் = செருப்பு அணிந்த அடியனர்; குழீஇ = திரண்டு; கொடு = வளைந்த; எயினர் = வேடுவர்; கூகை = ஆந்தை.]



# பிள்ளையாரும் — முத்துவும் —

— கலைமணி —

முத்து என்னவோ கெட்டிக்காரப் பையன்தான். இத்தனை ஆண்டுகளாக வகுப்பிலும் அவன்தான் முதல்வனாக இருந்தான்... ஆனால் இந்த ஆண்டு நடந்த பரீட்சைகளில் மட்டும் சாம்பு எப்படியோ முதல் மார்க் வாங்கிவிட்டான்....கால் பரீட்சையில் சாம்பு முதல் மார்க் வாங்கியபோது முத்து, தான் நன்றாகப் படிக்காததால்தான் சாம்பு முதல் மார்க் வாங்க முடிந்தது, படித்திருந்தால் தானே முதல் மார்க் வாங்கி யிருக்கக்கூடும் என்று நினைத்தான். ஆகவே அரைப் பரீட்சைக்கு விழுந்து விழுந்து (கீழே விழுந்தல்ல) அதாவது அவ்வளவு மும்முரமாகப் படித்தான். படித்துப் பரீட்சையும் எழுதினான். ஆனால் அவன் எதிர் பார்த்ததுபோல் அவனுக்கு முதல்மார்க் கிடைக்கவில்லை....மீண்டும் சாம்புவுக்கே கிடைத்தது. இந்தத் தடவை முத்து துக்கம் தாளாமல் விம்மி விம்மியழுதான். தான் படிக்காத சோம்பேறியாகி விட்டதாகத் தன்னையே நொந்துகொண்டான். சாம்பு எப்படித் தன்னைவிட முதல் மார்க் வாங்கினான் என்று எண்ணிப் பார்த்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. கடைசியாக சாம்புவையே கேட்டுப் பார்த்துவிடுவது என்று முடிவு செய்தான்.

முத்து சாம்புவைக் கேட்டபோது சாம்பு எல்லாம் 'தனக்குப் பிள்ளையார் அருளென்றும், தான் நாள்தோறும் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று வணங்குவதால் தனக்குப் பிள்ளையார் அருள் சுரந்து முதல் மார்க் கிடைக்கும்படி செய்விக்கிறார்' என்றும் ஜம்பமடித்துக் கொண்டான். இதைக் கேட்ட முத்து வியப்புடன் 'புத்தகத்தைத் தொட்டுப் படிக்காமலிருந்தால்கூட, முதல் மார்க் பிள்ளையாரை வணங்குவதால்மட்டும் கிடைத்துவிடுமா என்று கேட்டான், 'நிச்சயமாகக் கிடைக்கும்' என்றான் சாம்பு. சாம்புவின் வார்த்தையை உறுதிப்படுத்திக் கொள்ள முத்து தன் வகுப்பு ஆசிரியர் இராமமூர்த்தி அய்யரிடம் சென்று சாம்பு கூறியதைக் கூறி, 'மெய்தானா' என்றான். அவரும் சாம்புவின் பேச்சை ஆமோதிப்பதுபோல் பிள்ளையாரை நாள்தோறும் வணங்கினால் பரீட்சையில் வெற்றி கிடைக்குமென்றார்.

அதுமுதல் முத்து காலையில் எழுந்ததும், தங்கள் தெருக்கோடியிலிருந்த பிள்ளையார் கோவிலுக்குச் சென்று 'பிள்ளையாரே எனக்குப் பரீட்சையில்

முதல் மார்க் கிடைக்கும்படி வழி செய்யவேண்டும்' என்று கூறி வணங்கி வரலானான். இப்படி காலை, மாலை இரு வேளையும் வணங்கி வந்தான். கடைசியாக ஆண்டு முடிவில் நடக்கும் பரீட்சை வந்தது. முத்துவின் தோழர்க ளெல்லாம் சுறுசுறுப்புடன் படித் தார்கள். ஆனால் முத்து மட்டும் புத்தகத்தைத் தொடாமல் பிள் ளையார் கோவிலுக்குச் சென்று வந்தான்.

முத்துவின் தகப்பனார் கந்தசா மிக்கு, முத்துவின் புதிய போக் குக் குறித்து ஒன்றும் விளங்க வில்லை. அவர் நேராகப் பள்ளித் தலைமை ஆசிரியரிடம் சென்று நடந்ததைக் கூறி மீண்டும் முத் துவை எப்படி ஒழுங்காகப் படிக் கச் செய்வது என்று யோசனை கேட்டார். தலைமை ஆசிரியர் அதைக் கேட்டுவிட்டு "இப்போது முத்து எங்கே?" என்று கேட்டார். கந்தசாமி "முத்து பிள்ளையார் கோவிலுக்குத்தான் சென்றுள் ளான்" என்று கூறினார். "சரி, நான் இதைப்பற்றிக் கவனிக்கி றேன் என்று கூறி அனுப்பி விட் டார்".

அன்று மாலை முத்து கோவி லில் பிள்ளையாருக்கு எதிராக நின்றுகொண்டு, 'பிள்ளையார் பெருமானே இந்தத் தடவை சாம் புக்கு முதல் மார்க் கிடைக்காமல் எனக்குக் கிடைக்குமாறு செய் யுங்கள்' என்று வேண்டினான். உடனே இடி இடியென்று சிரிக் கும் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து 'பையா படிக்காமலே யாரும் முதல் மார்க் வாங்க முடி யாது.... ஆகவே போய் நன்றாகப் படி. பரீட்சை வரைக்கும் என் கோவிலுக்கு வராமலே படி. அப்படிப் படித்தால் தான் உனக்கு முதல் மார்க் கிடைக்கச் செய்வேன்' என்று பிள்ளையார் பேசினார். முத்துவும் 'அப்படியே செய்கிறேன் சுவாமி' என்று கூறி விட்டு வீட்டுக்கு ஓடினான் புத்த கத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிக்கத் தொடங்கி னான். பரீட்சையும் வந்தது. முத்து பரீட்சை நன்றாக எழுதி னான், ஒரு வாரத்தில் பரீட்சை முடிவும் தெரிவிக்கப்பட்டது. முத்து முதல் மார்க் எடுத்து, பரி சும் அடைந்தான்.

முத்து அன்று கோவிலுக்குப் போய் பிள்ளையாரிடம், தான் பரீட்சையில் வெற்றியடைந்த தைக்கூறி நன்றி செலுத்தினான். உடனே மீண்டும் அந்தச் சிரிப்புக் கேட்டது. 'முத்து, இப்போது தெரிந்ததா படித்தால்தான் பாஸ் செய்ய முடியும் என்பதை' என்று பிள்ளையார் பேசும் குரல் கேட்டது. 'தெரிந்தது சுவாமி' என்றான் முத்து 'தெரிந்ததா' என்று கேட்டுக்கொண்டே பிள் ளையாரின் பின்புறத்திலிருந்து தலைமையாசிரியர் வெளிப்பட் டார். முத்து ஆச்சரியத்தால் வாயடைத்துப் போனான். தலை மையாசிரியர் முத்துவைப் படிக் கச் செய்ய தான் செய்த தந்தி ரத்தைக்கூறி முத்துவுக்கு 'படிக் காமல் கடவுளை வணங்குவதால் மட்டும் மார்க் வந்துவிடாது' என்று புத்தி புகட்டினார். பைய னைப் படிக்கச் சொல்லாமல் அவனைச் சோம்பேறியாக்கிய இராமமூர்த்தி ஐயருக்கு வேலை போயிற்று.




— உலகப்பன் —

"பார்.... .... பார்....என் கப்பல் எப்படிப்போகுது?"

"ஏன் என் கப்பல் மட்டும்!"

"அடடே காற்று அடிக்கிறதடா?

'வெற்றி! வெற்றி!' என்கப்பல் மட்டுமே கரை சேர்ந்தது! அவன் கூச்சல் போட்டான்.

சின்னஞ் சிறுவர்கள் கூடி விளையாடினர். ஊருக்குப் புறத்தேயிருந்த ஏரியில். அவன் கப்பல் மட்டுமே காற்றில் கவிழாது கரை சேர்ந்தது. அந்தக் காகிதக் கப்பல் பயணத்தில் வெற்றி கண்டதற்காகக் கூவினான்; கும்மாளமிட்டான்,

'டே! உன்னைத் துணி விற்று வரச் சொன்னேனா? இப்படிக் காகிதக் கப்பல் விடச் சொன்னேனா'?—அவன் அப்பா.

முதுகில் இரண்டு அடி பலமாய் விழுந்தது. நெய்த துணியை எடுத்துக்கொண்டு, கடைத்தெருவிற்கு ஓடினான்.

ஆனால் இந்தக் கப்பல் பயண எண்ணம் மட்டும் அவனை விடவில்லை.

* * *

அப்பாவின் தொழில் பிடிக்கவில்லை பிள்ளைக்கு. பிள்ளையின் போக்கு பிடிக்கவில்லை அப்பாவுக்கு. அடிக்கடி போராட்டம்.

ஊரைவிட்டே ஓடிவிட்டான் அவன்.

பூகோளப் படங்கள் விற்று வயிறு வளர்க்கத் தொடங்கினான்.

ஆனால் அவன் உள்ளமோ உலகத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது.

மணிக்கணக்காகத் தெருவின் நடுவிலே படத்தைத் தூக்கிப் பிடித்து உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றுவிடுவான். உலகையே ஊடுருவிச் செல்வதாக எண்ணம்!

யாராவது படத்தின் விலையைக் கேட்கும் போதுதான் உணர்வு பெறுவான்.

பித்தன் என்றனர், கேலிபேசினர். கிண்டல் செய்தனர், அவனும் அவர்களோடு சேர்ந்து சிரித்துக் கொள்வான்.

எண்ணம் மட்டும் கடற் பயணத்திலேயே இருந்தது.

கடற்பயணம் பற்றிய நூல்களைப் படித்தான்.

கடல் மறவர்களுடன் உறவாடி பல செய்திகளை அறிந்தான்.

கடலமைப்பு, கடற்பயண முறை, கடல்கடந்த நாடுகள் பற்றிக் கேட்டுப் படித்துப் புரிந்து கொண்டான்.

தானும் ஒரு சமயம் கடற்பயணம் செய்யப் போவதாகக் கூறிக்கொள்வான்.

கடற்பயணம் இலகுவான காரியமல்ல, உடலிலே திறமும், உள்ளத்திலே உறுதியுங் கொண்டார் மட்டுமே, எண்ணிப் பார்க்க

முடியும். உண்ண உணவின்றி, குடிக்க நீரின்றி, உயிரைப் பணயம் வைத்து ஆடவேண்டிய விளையாட்டு. உற்றாரைத் துறந்து கடலிலே இறங்குகிறான் என்றால்.......!

அவன் அதற்குத் தயாராயிருந்தான்.

கேலிக்காக அவனை 'கடலோடி' என்று அழைத்தனர்; ஆனால் இதுவரை அவன் கடலில்கூட இறங்கியதில்லை.

* * *

கடலோடி போர்ச்சுகல் அரசன் இரண்டாம் ஜானை நாடி தன் எண்ணத்தைக் கூறி உதவி வேண்டினான்.

நாட்கள் கழிந்தன. மாதங்கள் உருண்டன.

எனினும் முயற்சி மங்கவில்லை. தாமதமாகும்; ஆனால் தடுத்து விட முடியாது தன் எண்ணத்தை என்று உறுதியோடிருந்தான்.

ஸ்பெயின் அரசியிடம் சென்றான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு உதவி கிட்டியது. உற்சாகம் கொண்டான். ஒட்பந்தம் முடிந்தது.

* * *

1492-ம் ஆண்டு ஆகஸ்டு 3-ம் நாள்.

லிஸ்பன் நகரமே கோலாகலமா யிருந்தது.

கணவன் வீடு புறப்படும் பெண்போல காட்சி தந்தது, துறைமுகத்தில் கப்பல்.

கடலோடி கடலோடுவதற்காக, கண்களிலே நம்பிக்கையொளி நர்த்தனமிட போர் முனைக்குச் செல்லும் போர்வீரன் போல பெருமிதத்தோடு நின்று கொண்டிருந்தான்.

மக்கள் ஆர்ப்பரித்தனர்.

மன்னனும், அரசியும் ஆசிகூறினர்!

ஆடி அசைந்து கப்பல் துறைமுகத்தை விட்டு நகர்ந்தது. அடித்தளம் மறைந்தது. பாய்மரம் தெரியவில்லை. புள்ளியாயிற்று.

அலைகள் மலையென எழுந்து வீசி மோதித் திரும்பின. கடலோடியின் ஆர்வ அலை அதையெல்லாம் உருட்டிப் புரட்டித் தள்ளிவிட்டு, கரைகாணாத கருங்கடலை ஊடுருவிக் கொண்டு புதிய உலகைத் தேட முயன்று கொண்டிருந்தது.

மாலை கழிந்தது. ஆடலும் பாடலுமாக.

காலை மலர்ந்தது, கடற் காட்சிகள் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாயின. கடற் பறவைகள் கீதமிசைத்தன.

ஒரு வாரமாயிற்று! கரை தெரியவில்லை.

இரண்டு வாரங்கள் முடிந்தன.

மூன்று வாரங்கள் புரண்டு விட்டன!

நான்கு வாரங்கள் நகர்ந்து சென்றன!

ஐந்தாம் வாரம், ஆறும் நாள் எதிர் பாராத புயல் ஆட்டிப் படைத்து விட்டது. உயிர் போயிற்றென நம்பினர். ஆனால் தப்பினர்.

பயணம் தொடர்ந்தது.

ஆறும் வாரம், ஏழாம் வாரம். எட்டாம் வாரம். எட்டியபாடில்லை கரை. கிட்டாத பழமாய்த் தோன்றிற்று.

உண்டி குறைந்தது. குடிநீர் சுருங்கியது. திரும்பி விடுவோம் என்றனர் சிலர். பசியும் கடற் சோர்வும் வருத்தின. உள்ளத்திலே உறுதியில்லாது பணமும்,

புகழும் இலக்குவாய் எதிர்பார்த்துக் கிளம்பியவர்களுக்கு, இத்தொல்லை எதிர்பாராததாயிருந்தது. முணுமுணுத்தனர். "இவனைக் கடலிலே தூக்கி எறிந்து விடுவோமா" என்றுகூட எண்ணினர்.

ஆசையூட்டினான், கூட இருந்தவர்களுக்கு ஆறுதல் கூறினான். கப்பல் கடல் நீரைக் கிழித்து முன்னேறிக் கொண்டிருந்தது.

*1492* அக்டோபர் *12*-ம் நாள்.

சோர்வு மிகுந்து துவண்ட உள்ளத்தோடு பயணத்திலிருந்தனர் அவர்கள். 'ஓ'வென்ற இரைச்சலன்றி, வேறொன்றும் கேட்டறியாத அவர்கள் காதில், பறவையின் மெல்லோசை பட்டது. அனைவரும் வெருள வெருள நாலா பக்கமும் பார்த்தனர்.

ஒரு பறவை கீச்சிட்டு மறைந்தது!

கட்டையொன்று கப்பலில் மோதிப் புரண்டது!

ஆசை துளிர்த்தது திரும்பவும். தூற்றியவர் போற்றினர். கைகள் மும்முரமாக வேலை செய்தன. இரவெல்லாம் புதுமை எதிர்பார்த்திருந்தனர்.

கதிரவன் காட்சி தந்தான். அச்சஇருள் கழிந்தது. நம்பிக்கை கொண்டனர். கரை கிட்ட வந்தது. கப்பலைக் குடாவொன்றில் நிறுத்திவிட்டு, கரையடைந்தனர். செடியும், கொடியும், மரமும் நிறைந்த செழிப்பான பகுதி அவர்களை இன்பத்திலாழ்த்தியது.

கடலோடி களிப்பில் மூழ்கினான்.

இந்தியாவை அடைந்து விட்டான் — அப்படித்தான் கடலோடியும் இவனோடு வந்தவர்களும் நம்பினர். உண்மையில் அவர்கள் அடைந்தது மேற்கிந்தியத் தீவுகளிலொன்று தான்.

வெற்றிப் பெருமையுடன் வீடு திரும்பினர், பொன்னையும் பொன்னிற மனிதர்களையும் ஏற்றிக் கொண்டு ஏழுதிங்கட்கப்புறம்.

*1493*-ல் லிஸ்பன் வந்தடைந்தான் கடலோடி வெற்றி வீரனாக. அரசாங்கம் அவனுக்குத் தனி மரியாதை செலுத்திக் கவுரவித்தது.

திரும்பத் திரும்ப மூன்று தடவை அமெரிக்கா சென்று திரும்பினான்.

புதுவுலகம் கண்டு பெருமையுறச் செய்தான். அந்தச் சிறப்பு ஸ்பெயினையே சாரும். இன்றுங் கூட தென் அமெரிக்காவில் ஸ்பானிய மொழி பெரும்பான்மையினர் மொழியாயிருந்து அதைச் சுட்டிக் காட்டுகிறது எனலாம்.

உலகக் காதையிலே இந்தப் புதுவுலகக் கண்டுபிடிப்பு ஒரு சுவையர்ன அத்தியாயமாகியது. பூகோள அறிவு புதுமையுற்று, திருத்தம் பெற்று, வளர வழி பிறந்தது.

இங்ஙனம் உலகம் பெரிதாக உள்ளதைத் தெளிவாக்கிய கடலோடி—இத்தாலியக் குடிமகனாக *1451*-ல் பிறந்தான். துயரம் அனுபவித்தான். உலகப் போக்கையே தலைகீழாக—தட்டையாயிருந்ததை—உருண்டையானது என்று அறிய வழி வகுத்தான். ஸ்பானிய குடிமகனாக—வீரனாக—*1506*-லே இயற்கையெய்தினான்.

அந்தக் கடலோடிதான்

கிறிஸ்டோபர் கொலம்பஸ்!

*

Edited, Printed & Published by Aru. Periyannan for Ponni Ltd., at Ponni Achakam, 127 Broadway, Madras-1.

Regd. No. M. 6486 PONNI 1st March, 1955

# வெற்றிப் பாதையில்!

தமிழ்ப் பத்திரிகையுலகில் புரட்சிப் பண்பும், புதுமை ஆர்வமும், கலையுணர்வும் [illegible] நிறைவும் ஒருங்கே கொண்டிலங்குவது. தமிழகம் புகழும் சிறந்த எழுத்தாளர்களின் எழுத்தோவியத் தொகுப்பாக மிளிர்வது. தமிழ்நாட்டுக் குடும்பங்களிலுள்ள ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர் அனைவருக்கும் விருந்தூட்டும் முறையில் வெளிவருவது

உங்கள்

## 'பொன்னி' (மாதம் இருமுறை)

★

"தமிழர் குடும்பம் ஒன்று—பொன்னி ஒன்று!" என்ற நிலைவரப் 'பொன்னி' அன்பர்களின் ஒத்துழைப்பைப் பெரிதும் வேண்டுகிறோம்,

1. உங்கள் ஊரில் 'பொன்னி' விற்பனை யாளர் இதுவரை ஏற்படாதிருந்தால் ஒருவரை அப்பணியில் ஊக்குவது
2. உங்கள் நண்பர்கள், உறவினர்கள் சங்கங்கள், பொது நிலையங்கள் 'பொன்னியை' வரவழைக்கும்படி செய்வது
3. உங்களுக்குத் தெரிந்த, தொழில் துறை களில் உள்ள அன்பர்களைப் 'பொன்னி' யில் விளம்பரம் செய்யும்படி தூண்டுவது

இவை உங்கள் முயற்சிகளானல் 'பொன்னி'யை வெற்றிப் பாதையில் செலுத்தியவர்களாவீர்கள்!

## பொன்னி அலுவலகம்

த. பெ. எண். 1795.

சென்னை—1.